இதழ் 233

# மண்

ஜேர்மனி / 2025

புரட்டாதி - ஐப்பசி / Sep - Oct



## 28 வது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் - 26.08.1910 / மறைவு - 05.09.1997

அன்பை மட்டும் கடன் கொடுங்கள் அது மட்டுமே
அதிக வட்டியுடன் திரும்பக் கிடைக்கும் - அன்னை திரேசா








Duisburg - யேர்மனியில் வசிக்கும் எமது வாசகர் திருமதி இராஜேஸ்வரி சிவராசா அவர்களின் நிதி உதவியால் தந்தையாரின் நினைவாக மன்னாரிலுள்ள சாந்தோம் முதியோர் இல்லத்தில் வசிப்போருக்கு உணவளித்தல் 08.07.2025.








Oberhausen - யேர்மனியில் வசிக்கும் எமது வாசகர் திரு சீனித்தம்பி பிரபாகரன் அவர்களின் நிதி உதவியால் தாயாரின் நினைவாக புதுக்குடியிருப்பிலுள்ள ஒளிரும் வாழ்வு இல்லத்தில் வசிப்போருக்கு உணவளித்தல் 28.07.2025.

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de

**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

அனைவருக்கும் வணககம்!...

நமதுநாட்டிலுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க 01.09.2025 யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது, அவர் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடைபெறும் இடத்திற்கு விஜயம் செய்வார் என அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு தரப்பின்னராலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முன்னதாக, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரும் ஜனாதிபதி செம்மணிக்கு விஜயம் செய்வார் எனக் கூறியிருந்தார். எனினும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க செம்மணி வீதியை கடந்து பயணித்த போதிலும், செம்மணி மனித புதைகுழியை சென்று பார்வையிடவில்லை என பொது ஆர்வலர்கள் விமர்சிக்கின்றனர்.

அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் வைத்து உரையாற்றும் போது, செம்மணி அகழ்வு இடைநிறுத்தப்படமாட்டாது என்றும், செம்மணி தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும், நீதி பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து ஜனாதிபதியின் செம்மணி நோக்கி பயணம் அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் அங்கு செல்லாமல் அதனை கடந்து சென்றமை தமிழர் தரப்பை ஏமாற்றமடையச் செய்துள்ளது இதேவேளை, செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் இலங்கையின் பெரும்பான்மையின சிங்கள மக்களிடத்தில் இருவகையான போக்கு காணப்படுகின்றது.

சில தரப்பினர் செம்மணி பெரும் அழிவு என்றும், செம்மணி மனித புதைகுழி, அதில் புதையுண்டவர்கள் தொடர்பில் நியாயமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தினாலும் பெரும்பான்மையானோர் செம்மணி தொடர்பில் எதிரான மன நிலையிலேயே இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில், இலங்கையில் ஆட்சியதிகாரத்தை தீர்மானிக்கும் சக்திப் படைத்த சிங்கள மக்களை திருப்திப்படுத்த வேண்டிய கட்டாயமும் அநுரவுக்கு ஏற்பட்டிருப்பதுடன், வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்களின் வாக்குகளையும் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய தேவை அவருக்கு காணப்படுகின்றது.

எனவேதான், செம்மணியை சென்று பார்வையிட்டால் சிங்கள மக்களிடத்தில் அது சலசலப்பை ஏற்படுத்தலாம் என்று கருதி ஜனாதிபதி செம்மணியை தவிர்த்து விட்டுச் சென்றிருக்கலாம் என்று அரசியல் பரப்பில் பேசப்படுகின்றது.

முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, அங்கு இனவாதம் குறித்து கதைத்திருந்தார்.தோல்வியடைந்த அரசியல்வாதிகளே இனவாதம் குறித்து பேசி மக்களை திசைதிருப்ப முயல்வதாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார். மேலும், இனவாதத்தை முற்றிலும் ஒழிக்க எந்தவொரு எல்லைக்கும் செல்ல தயார் என அவர் உறுதியளித்திருந்தார்.







அரசியல், வன்முறை, போர், உள்நாட்டுப்போர் போன்ற காரணங்களால் உலகம் முழுவதும் காணாமல் ஆக்கப்படுவோரும் வலிந்து காணாமல் ஆக்கப்படுவோரும் நம்நாட்டில் துன்ப, துயரத்தில் பல ஆண்டுகளாகத் உழலும் வேதனையான சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இவர்கள் காணாமல் ஆக்கப்படவர்கள் பற்றிய தகவலுக்காகக் காத்துக் கிடக்கின்றனர்

அவர்களுடைய துயரம் குறித்து கவனத்தை ஈர்ப்பதற்காக ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாக ஐ.நா. சபையானது கடந்த 30.08.2011ல் அறிவித்தது. இந்நாளில் போராட்டம் நடாத்தியும் பேரணிகளும், ஊர்வலங்களும், முழக்கங்களும் எழுப்பியும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், நட்புக்கள் இந்நாளைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

இலங்கையில் 1980ம் ஆண்டிலிருந்து இது ஆரம்பித்தாலும் 1983 - 2009 யுத்தத்தின்போது பல்லாயிரம் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.நமது குடும்பத்தில் ஒருவர் வெளியே சென்று வரத்தாமதமானால் நாம் எவ்வளவு பாடுபடுகின்றோம்..ஆனால் பல வருடங்கள் உறவுகளைத் தேடி அலையும் ஆயிரம்..ஆயிரம் குடும்பங்களின் நிலையை எண்ணிப்பார்த்தால் அவர்களின் வேதனைகளைப் புரிந்து கொள்ளலாம்.

இதில் மிக அதிகமான இழப்புகளைச் சந்தித்தவர்கள் என்றால் தமிழ் மக்கள்தான் தமது உறவுகளைத் தேடித்தேடியே பலர் இறந்துவிட்டனர். பலர் நோய்வாய்ப்பட்டுள்ளனர்.சிலர் வாழ்வாதாரம் இன்றி பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர். எனினும் தங்கள் உறவுகள் வருவார்கள் என்ற நம்பிகையோடு வாழ்கிறார்கள்.

தமிழர்கள் படுகொலை, காணாமல் போதல்களைக் கடுமையாக எதிர்த்த ஊடகவியலாளர்கள், மனிதஉரிமையாளர்கள், இயக்கங்களின் முக்கியஸ்தர்கள் எனப்பலரும் காணாமல் போயிருக்கிறார்கள். அத்தோடு நமது இயக்கங்களாலும் பலர் காணாமல் போனதையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இவர்கள் உயிருடன் இருக்கிறார்களா?..இல்லையா என்பது பற்றிய தகவல்கள் ஏதும் தெரியாமலே தவிக்கின்றனர்.

அவர்களின் துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நீதி கிடைக்க வேண்டும். குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்க வேண்டும் இதையே பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் அரசிடம் எதிர்பார்க்கிறார்கள். விடிவு கிடைக்கமா?..நீதி கிடைக்குமா?..நீதிக்கான போராட்டங்கள் பல வழிகளில் தொடவேண்டும்!...

**ஆசிரியர் - 02.09.2025**

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### சை எனத் திரியேல்...

பள்ளி செல்லும் பருவம் வந்ததும் பெற்றோர் உங்களைக் கல்விச் சாலைக்கு அனுப்புகிறார்கள். கண்போன்ற கல்வியைக்கற்று அறிவில் வளர்ச்சியடைந்து, ஒழுக்கத்தில் உயர்ந்து, வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பது உங்கள் பெற்றோரின் ஆசை. இப்படிக் கல்வி கற்று, அறிவு வளர்ச்சி பெற்று, வாழ்க்கையில் உயர ஊக்கம், முயற்சி, ஒழுங்கு இவை வேண்டும். சிலர் படிப்பதில் ஊக்கம் காட்டாமல், ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்லாமல் கெட்டவர்களோடு நட்புக்கொண்டு திரிவார்கள். பெற்றோர் கண்டித்தாலும் கேட்க மாட்டார்கள். இப்டித் தான்தோன்றித் தனமாக நடப்பவரை ”சை, கெட்டவன்” என்று உலகம் இகழும். வாழ்க்கையில் ஒழுங்கில்லாதவர்களை ”சீ” என்று பிறர் ஒதுக்குவது இயற்கை. இப்படிப் பிறர் வெறுக்கும்படி நீங்கள் வாழக்கூடாது என்கிறது ஆத்திசூடி.

### சொல் சோர்வு படேல்...

உங்களுக்கெல்லாம் இராமாயணம் தெரியும். இராவணனின் தம்பி கும்பகர்ணன் கதையும் தெரியும். அவன் அப்படி ஏன் நெடுந்தூக்கத்துக்கு ஆளானான்?.. கடவுளை நோக்கித் தவம் செய்தவன் கடவுள் தோன்றி ”என்ன வரம் வேண்டும்” கேள் என்றதும் வாய்தவறி ”நித்தியத்துவம்” அதாவது அழியா வாழ்வு வேண்டும் என்பதற்குப் பதிலாக ”நித்திரைத்துவம்” அதாவது எப்போதும் தூங்க வேண்டும் என்று கேட்டு விட்டான் வாய்தவறுதலாக. கேட்டபடியே வரமளித்துவிட்டார் கடவுள். ஆகவே நீங்கள் பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். கும்பகர்ணனைப் போல மறதியாகவோ, வாய் தவறியோ எதையாவது உளறிவிடக்கூடாது என்பதை எச்சரிக்கவே சொல் சோர்வு படேல் என்று போதிக்கிறார் ஔவைப்பாட்டி

# நல்நெறிபற்றி........

- வி நந்தகுமாரன் -

## விழிப்பாயிரு... செழிப்பாயிருப்பாய்...

அநாகரீகமான அதிக பேச்சைவிட சிந்தனை நிறைந்த சிறிய பேச்சு சிறப்பு.
ஆழமான தத்துவங்களும், அதிக அர்த்தங்களும் அடங்கியதே வாழ்க்கை.
இருவரில் ஒருவராவது கோபத்தை தடுத்துத் தணித்தால், தகுந்த சமாதானம் கிட்டும்.
ஈர்க்கப்படும் வேண்டாத தவறுகளால் இளம் சமுதாயம் தம்மை இழக்கிறது.
உண்மை நிலைமைகளை உணர்ந்து கொடுக்கும்போது உயர்ந்த மனிதனாகிறாய்.
ஊதியம் உயர்த்துவதற்கு உறுதுணை,உயர்ந்தோர் நட்பைத்தேடுவதேயாகும்.
எந்தக்கஷ்டத்திலும் நீதியைத் தழுவிக்கொள், உனக்குள் நின்மதி தளைக்கும்.
ஏமாற்றங்களை எதிர்கொள்ளும் வெற்றி மனப்பான்மை, எம்மை உயர்த்தும்.
ஜனனத்திற்கும் மரணத்திற்கும் இடைப்பட்ட காலம், இறைவனால் இயக்கப்படுகிறது.
ஒழுக்கமான பாதையில் சென்று, ஒரு ஒழுங்கு சீரான வாழ்வைப் பெறுங்கள்.
ஓர் உயிரில் இன்னொரு உயிர் அன்பு செலுத்தும்போது, கருத்தொருமித்த காதலாகிறது.
நெருக்கடியில் நொருங்காமல் பழிப்பதும் பழிவாங்குவதும், நிலை தடுமாறாமல் நில்.
புதைகுழியில் புதையும். மனித மனம் மாசுபடும்போது, மகிழ்ச்சி மாயமாக மறைகிறது.
மனிதனை வெல்பவனை விட, மனத்தை வெல்பவன் மகா வல்லவன்.
விபரீதமான விதண்டா வாதத்தால் வரக்கூடாத வேதனைகள் வரும்.
அறிவிருந்தும் அதைப் பாவியாமல், அழிப்பதும், அழிவதும், அர்த்தமற்றது.
தடுமாற்றமான பேச்சுக்கள் தலைவர்கள் மத்தியில் தலைக்குனிவைத் தரும்.
பேசுவது பெரிதல்ல பிரச்சனைகளை பெரிதாக்குவதே மிகப்பெரிய தவறு.
பிரச்சனை இல்லாமல் சமூகம் இல்லை, தீர்க்கப்படாமல் வாழ்ந்தவர்களும் இல்லை.
பிரச்சனைகளைக் கண்டு பயப்படாதே, பயந்தால் அது உன்னை பிசைந்தெடுக்கும்.
சிறிய பிரச்சனையானாலும், தீர்ப்பதில் தீவிர கவனம்செலுத்து, சீக்கிரம் தீரும்.
நாம் செல்ல வேண்டிய பாதையை நாம் தான் சரிவர செப்பனிட வேண்டும்.
புரியவேண்டியதை புரிந்து கொண்டால் மட்டுமே புகலிடம் புனிதமாகிறது.
நாளும்பொழுதும் நிகழும் நன்மை தீமைகள், எமது நடைமுறைகளால் நுழைகிறது.
நீங்கள் படுக்கையை விட்டு எழும்பும்போது, புத்தம்புதிய நாள் பூத்து மலர்கிறது.
சங்கடமான நிலையை சந்தோஷமாக மாற்ற சக்தி பெற்றிருக்க வேண்டும்.
கருணைப்பட வேண்டிய நேரம் கருணை காட்டாவிட்டால், காலம் நம்மைத் தண்டிக்கும்

## மண் சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவுப் போட்டி...

**18 – 19 வயதுப்பிரிவு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 2 வது பரிசு பெற்றது...**

# திருக்குறள்

தமிழின் தொன்மையான நூல்களில் ஒன்று திருக்குறள் ஆகும். இது திருவள்ளுவரால் எழுதப்பட்டது. உலக இலக்கியங்களில் சிறந்த எழுத்து வடிவமாக இருக்கின்றது. திருக்குறளில் 1.330 குறள்கள் உள்ளன. 133 அதிகாரங்களில் அவை அமைந்துள்ளன. ஒவ்வொரு குறளும் இரு வரி-களைக் கொண்டு அமைந்துள்ளது. திருக்குறள் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அறம் என்பது ஒழுக்கத்தையும் தர்ம வாழ்க்கையைப் பற்றிச் சொல்கிறது. பொ ருள் என்பது அரசியல், பொருளாதாரம் பற்றிக் கூறுகின்றது.. இன்பம் ஆனது காதல் மற்றும் குடும்ப வாழ்க்கை பற்றியும் கூறுகின்றது. திருக்குறளானது மொழி, மதம், இனம், நிறம் என்று வேறுபாடு இல்லாமல் எல்லோருக்கும் பொருந்தக்கூடிய ஒரு சிறப்பான நூலாகும்.

இந்த நூலானது பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்திய மொழிகளில் மலையாளம்,ஹிந்தி போன்ற பல்வேறு மொழிகளில் காணப்படுகின்றது. மற்றும் ஆசிய மொழிகளான யப்பான், சீனா போன்ற மொழிகளிலும் ஐரோப்பிய மொழிகளான ஆங்கிலம், இத்தாலி, டொச், பி-ரென்ஸ்,, ஸ்பானிஸ், ருசியா போன்ற பல மொழிகளிலும் காணப்படுகின்றது. திருக்குறளால் தமிழ் மொழியின் அறிவும் ஆழமும் உலகத்துக்குத் தெளிவுபடுத்தியதுடன் தமிழின் பெருமையையும் உலகத்துக்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இன்று பல நாடுகளின் தெருக்களிலும் பல்கலைக் கழகங்களிலும் திருக்குறள் காணப்படுகின்றது. திருவள்ளுவரின் மாதிரி உருவச் சிலைகளை வைத்து தமிழுக்கும் தமிழருக்கும் பெருமைகளைச் சேர்த்துள்ளார்கள். திருக்குறளின் பெருமையை எடுத்து நோக்கினால் ”அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே” என்று தொடங்கி ஈரடிக் குறளில் உலக தத்துவங்கள் அனைத்தையும் திருக்குறள் என்ற நூலில் உள்ளடக்கி மக்களின் வாழ்க்கைக்கு நல்ல ஒளி விளக்காகப் படைத்துள்ளார்.

எனவே மாணவர்களாகிய நாமும் திருக்குறளின் சிறப்பை, முக்கியத்துவத்தையும் உணர்ந்து, திருக்குறளைப் போற்றிக் கற்று அதன் சிறப்பை உணர்ந்து அதன்படி வாழ்வோமாக...

**செல்வி சிந்திகா சிவகுமாரன் – எசன் – யேர்மனி**






# முல்லாவின் கதை


## எல்லோரும் சோம்பேறிகள்!...

சந்தை கூடும் இடத்தில் ஒரு உயர்ந்த இடத்தில் முல்லா நின்று கொண்டார்.மக்கள் சந்தையை நோக்கிப் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தனர்.அன்பார்ந்த நண்பர்களே? உங்களுக்கு உங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற அருமையான சில யோசனைகள் என்னிடம் இருக்கின்றன. இவற்றை காது கொடுத்துக் கேட்க வேண்டும் என்று நினைப்பவர்கள் அருள் கூர்ந்து சற்று நில்லுங்கள்... என்று முல்லா உரத்த குரலில் கூறினார். முல்லா என்ன சொல்லப் போகிறார் என்று அறிந்து கொள்வதற்காக ஒரு பெருங்கூட்டம் அங்கே கூடிற்று.

" நண்பர்களே! கொஞ்சங்கூட உடல் உழைக்காமல் வீட்டில் இருந்தவாறே ஆயிரக்கணக்கில் சம்பாதித்து சுகபோக வாழ்வு வாழ உங்களில் எத்தனை பேருக்கு விருப்பம்? நான் அதற்கு வழி சொல்லுகிறேன் என்னுடைய யோசனைகளைக் கேட்கத் தயாராக இருப்பவர்கள் எத்தனைபேர்? அவர்கள் மட்டும் கைதூக்குங்கள் " என்றார் முல்லா.அநேகமாக அங்கே இருந்த அத்தனைபேரும் கை தூக்கினார்கள். முல்லா உழைக்காமல் சுக-போக வாழ்வு வாழ என்ன வழி? தயவு செய்து கூறுங்கள்? என்று மக்கள் கூச்சலிட்டனர்.

முல்லா தாம் நின்றிருந்த இடத்தை விட்டுக் கீழிறங்கி நடக்கத் தொடங்கினார். என்ன முல்லா அவர்களே, ஒன்றும் சொல்லாமல் செல்லுகிறீர்களே? என்று மக்கள் கேட்டனர். நண்பர்களே நமது ஊரி-லே எத்தனை சோம்பேறிகள் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பினேன் என்னையும் சேர்த்து இந்த ஊரில் உள்ள எல்லோருமே சோம்பேறிகள்தான் என்ற உண்மை எனக்கு விளங்கி விட்டது. இனி எனக்கு இங்கே என்ன வேலை? போய் வருகிறேன் என்று கூறியவாறே முல்லா செல்லத் தொடங்கினார்.அங்கிருந்த மக்கள் திகைப்படைந்தவர்களாக முல்லா சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

# பயத்தின் பேரில் பலம்!...



பயம் உன்னை
எதிர்கொள்வதில்லை,
அது உன்னுள் மறைந்த ஒரு
கதையை உணர்த்துகிறது.
எங்கு உன் உள்ளம் தளர்ந்தது,
அங்கு உன் உணர்வு புதிய
வலிமையை கொண்டாடும்.
பயப்படுவது குறைபாடே இல்லை,
அது உன்னை நோக்கி ஒரு
பயணத்தை
ஆரம்பிக்கின்றது.
உன் தளர்ச்சியைக் காணும்
போதெல்லாம்,
அது உன்னைக் குணமானவராக
மாற்றுகிறது.
பயம் எனும் வெயில் உன்
நினைவுகள் எரிகின்றன,
அதைத் தாண்டும் போது,
உன் உள்ளம் மாறும்,
அதன் பயம் பரம்பரை
வலிமையாக மாறும்.
எப்போதும் உன் குறைகளை
அறிந்து,
அதை நிலையாக அணுகினால்,
நீ எளிதில் பலமாகி,
அழகான மனதுடன் வாழமுடியும்...

**செல்வி. நிதுஷா ஆசீர்வாதம்.**
**எசன் தமிழ்க்கலாச்சாரா**
**பாடசாலை.**

## *Stärke im Angesicht der Angst*

Angst begegnet dir nicht,

sie zeigt dir eine Geschichte, die tief in dir verborgen ist.

Dort, wo dein Inneres schwach ist,

wird dein Gefühl neue Stärke feiern.

Angst ist kein Makel,

sie wird zu einer Reise, die dich führt.

Jedes Mal, wenn du deine Schwächen siehst,

verwandelt sie dich in einen mitfühlenderen Menschen.

Im Feuer der Angst verbrennen deine Gedanken,

doch jenseits davon,

verändert sich dein Inneres,

und ihre Angst wird zu einer Stärke der Generation.

Wenn du deine Schwächen erkennst,

und fest an ihnen arbeitest,

wirst du leicht stärker,

und mit einem schönen, offenen Herzen leben können. ~

Nithusha Aseervatham

# நகுலின் தகவல்கள் - 12

## நவராத்திரி

நவராத்திரி புரட்டாதி மாதத்தில் கொண்டாடப்படும். இந்த கொண்டாட்டம் ஒன்பது நாட்கள் நடைபெறும். நவராத்திரி என்பது நவம் + இராத்திரி பிரிந்து ஒன்பது இரவுகள் எனப்பொருள்படும். இதில் முதல் மூன்று நாட்களும் துர்க்கைக்கும் அடுத்த மூன்று நாட்களும் லக்ஸ்மிக்கும் இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதிக்கும் விழா எடுக்கப்படும். இதில் வீரம், செல்வம், கல்வி என்பவற்றை வேண்டி வழிபாடு செய்வோம். பத்தாம் நாள் விஜயதசமி கொண்டாடப்படும்.

அன்று ஏடுதொடக்கம், கலைநிகழ்ச்சி நடத்துவது, புதிய கலைவகுப்பு தொடங்குவது போன்றன நடைபெறும். நவராத்திரியில் பூசைகள் நடைபெறும் அப்போது நவராத்திரிக்குரிய சகலகலாவல்லி பாடல்கள் பாடப்படும். இதனை இந்து சமயத்தவர்கள் கொண்டாடுவார்கள். அம்மன் மகிடாசுரன் என்ற அசுரனுடன் ஒன்பது நாட்கள் போரிட்டு பத்தாம் நாள் அசுரனை அழித்த கதையுடன் தொடர்பு படுத்தி கூறுவர். இந்த கொண்டாட்டத்தை சந்தோசத்துடன் நாமும் கொண்டாடி வழிபடுவோம்.

**செல்வன் நகுல் துரையரங்கன்**
**எசன் - தமிழ்க் கலாச்சாரா பாடசாலை.**

# நல்ல மனசு வாழும்....

சில நேரங்களில் அறிவின் கூர்மையைவிட இரக்கமும் கண்ணியமும் தேவைப்படுகிறது எப்படி என்கிறீர்களா? வெப்பத்தின் உச்சம் அதிகரிக்க தாகமாக இருந்த வேளையில் நீரைத்தேடியது மனசு. கிடைத்தால் தாகம் தீரும் என்று நினைத்ததால் யாரோ உணர்ந்து தண்ணீர் தந்து பருகியதை நினைக்கிறது. மனசு.

வேறு யாரும் அல்ல. வெள்ளை இன இளம் சிறுவன்.அவன் மனதில் இப்படி எதிர்பார்ப்பு. கொடுக்கவேண்டும் என்ற நல்லஎண்ணம். ஒரு போத்தல் தண்ணீரை தந்து உதவுகிறான். நினைத்துப் பார்க்கிறது மனது.சிறுவனாய் இருந்தாலும் இவனும் கடவுள்தான். குறிப்பறிந்து செய்யும் நற்செயல்கள் எப்போதும் நன்மை பயக்கும். அந்த வகையில் நிறங்கள் மாறுபட்டாலும் மனதில் இரக்கமும் அன்பும் நிலைப்பதை நினைத்தால் வாழ்க்கை சொர்க்கம் தான். நல்ல மனது எப்போதும் வாழும்!...

**நகுலா சிவநாதன்**

## உலகில் தமிழ் அதிகமாகப் பேசப்படும் நாடுகள்...

01- இந்தியா - 7.80.00 000 பேர்
02- சிறீலங்கா - 31 00 000
03- மலேசியா - 23 00 000
04- மியன்மார் - 10.00 000
05- அமெரிக்கா - 3.45.000
06- தென்னாபிரிக்கா - 2.50.000
07- கனடா - 2.38.000
08- சிங்கப்பூர் - 1.98.000
09- பிரான்ஸ் - 1.25.000
10- பிரித்தானியா - 1.23.000

## உலகில் ஆடுகள் அதிகமாக வளர்க்கப்படும் நாடுகள்...

01- இந்தியா - 1.60.00.000
02- சீனா - 1.13.00.000
03- நைஜீரியா - 83.00.000
04- பாக்கிஸ்தான் - 78.00.000
05- பங்களாதேஷ் - 60.00.000
06- எந்தியோப்பியா - 52.00.000
07- சாட் குடியரசு - 41.00.000
08- கென்யா - 36.00.000
09- சூடான் - 32.00.000
10- மாலி - 28.00.000

## உலகில் இந்தியர்கள் அதிகமாக வாழும் நாடுகள்..

01- அமெரிக்கா - 45.06.000
02- சவுதிஅரேபியா - 42.00.000
03- ஐ.அரபு குடியரசு - 34.26.000
04- மலேசியா - 30.00.000
05- மியன்மார் - 20.00.000
06- பிரித்தானியா - 19.00.000
07- கனடா - 18.60.000
08- சிறீலங்கா - 15.00.000
09- தென்னாபிரிக்கா - 14.90.000
10- குவைத் - 16.30.000

## உலகில் யானைகள் அதிகமாக வாழும் நாடுகள்...

01- போஸ்வானா - 1.30.000
02- சிம்பாவே - 1.00.000
03- தான்சானியா - 81.000
04- கபோன்குடியரசு - 50.000
05- கென்யா - 36.000
06- இந்தியா - 32.000
07- சாம்பியா - 26.000
08- நபீபியா - 25.000
09- தென்னாபிரிக்கா - 24.000
10- கொங்கோ குடியரசு - 16.000

# சொல் - இலக்கணம் வினாக்கள்.

1) சொல் என்றால் என்ன?
ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் சேர்ந்து கருத்து தருமாயின் அது சொல் எனப்படும்.

2) தமிழ் இலக்கணத்தில் சொல் எத்தனை வகைப்படும்? - 4 வகைப்படும்

3) அவை எவை? - பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்

4) பெயர் சொல் எத்தனை வகைப்படும்? அவை எவை? - 6 வகைப்படும்
   1) பொருட் பெயர் - கட்டில், சோறு, வசந்தி, முருகன்
   2) இடப்பெயர் - பாடசாலை, யப்பான், கொழும்பு, மைதானம்
   3) காலம் - நேரம், நாள், திகதி, மாதம், ஆண்டு, பருவகாலங்கள் முதலியவற்றை குறிக்கின்றன சொற்கள் இதற்குள் அடங்கும்.
   4) சினை - ஒரு பொருள் பகுதிகள் யாவும் இதற்குள் வரும். கால் , கண், பழம், இலை,
   5) குணம் - பண்பு, வடிவங்கள், நிறங்கள், உணர்ச்சிகள் போன்றவற்றை குறிக்கும் சொற்கள். வட்டம், சிவப்பு, சிரிப்பு
   6) தொழில் - வினைச்சொற்கள் அல் விகுதி பெற்று வரும் சொற்கள். சமைத்தல், ஓடுதல், சாப்பிடுதல்

5) பெயர்ச் சொல்லின் 4ஆம் பிரிவுக்கு என்னப் பெயர்? - சினைப்பெயர்

6) பெயர்ச் சொல்லின் இடப்பொருளுக்கு உதாரணம் தருக. - பாடசாலை, வீடு, கடற்கரை

7) சொல் வகைக்குள் எந்த வகை அதிக பிரிவுகளுடையது எது? - பெயர்ச்சொல்

8) வினைச்சொல் என்றால் என்ன?
செயலை குறிக்கின்றன சொற்கள் வினைச்சொல் எனப்படும். எடுத்துக்காட்டு - படி, நடந்தான்

9) வினைச்சொல்லின் பிரிவுகள் எவை? தெரிநிலைவினை (முற்று வினை) - ஆடினான்குறிப்பு வினை (எச்சவினை ) - கதைத்த, எழுந்து

10) எச்சவினையில் பெயர் எச்சத்திற்கு ஓர் உதாரணம் தருக.
- விழுந்த புத்தகம், அழுகிற பிள்ளை

11) எந்த இலக்கண நூலிருந்து சொல்லின் அடிப்படை வகைகள் எடுக்கப்பட்டன - தொல்காப்பியம் தொடரும்.......

**செல்வி அனுஸ்கா ராகவன்**
**தமிழ்ப்பாடசாலை – எசன் – யேர்மனி**

## சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 51


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | | | 6 | 5 | | | 7 |
| | | 6 | | | 7 | 4 | 8 | |
| 2 | | 7 | 4 | 9 | | | | 6 |
| | 6 | | | 7 | | 1 | | |
| 3 | | 1 | 5 | | | | 7 | 2 |
| | 9 | | | 4 | 2 | 3 | | 8 |
| 1 | | 8 | 6 | | | | 2 | 9 |
| | 2 | | | 1 | 8 | 6 | 4 | |
| 6 | | | 3 | | | | 1 | |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 144
## ( புரட்டாதி - ஐப்பசி 2025 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-04 அகிம்சை போதித்த பெருமான்.
13-14 சில மாணவர்கள் இது எழுதுவதில் வல்லவர்கள்.
வ-இ
08-07 மனித உறுப்புகளில் இதுவும் ஒன்று.
11-10 ஊட்டச்சத்து நிறைந்த நீராகாரம்.
கீ-மே
09-01 பெண்கள் அணிவது.
16-04 அழியாப் புகழ் பெற்ற கவிஞர்.
மே-கீ
06-14 இது பெறாதவர்களை முகத்தில் இரண்டு புண்ணுடையவர்கள் என்றார் வள்ளுவர்
11-15 அரைவாசி என்று பொருள்படும்.


முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.





இவைப் பதினாறையும் கடைபிடித்தா
போதும். உடல் ஆரோக்கியத்துடன் வா
நம் முன்னோர்களின் எளிய வழிமுறை.

1) உணவிடை நீரை பருகாதே!
2) கண்ணில் தூசி கசக்காதே!
3) கத்தி பிடித்து துள்ளாதே!
4) கழிக்கும் இரண்டை அடக்காதே!
5) கண்ட இடத்தில் உமிழாதே!
6) காதை குத்தி குடையாதே!
7) கொதிக்க கொதிக்க குடிக்காதே!
8) நகத்தை நீட்டி வளர்க்காதே!
9) நாக்கை நீட்டிக் குதிக்காதே!
10) பல்லில் குச்சிக் குத்தாதே!
11) பசிக்காவிட்டால் புசிக்காதே!
12) பசித்தால் நேரம் கடத்தாதே!
13) வயிறு புடைக்க உண்ணாதே!
14) வாயைத் திறந்து மெல்லாதே!
15) வில்லின் வடிவில் அமராதே!
16) வெற்றுத் தரையில் உறங்காதே!





ஆங்கிலத்தில் D என்ற எழுத்துடன் துவங்கும் அநேக வார்த்தைகள் நமக்குத் துன்பம் தருவனவாகவே உள்ளன.

Danger -அபாயம்
Death- மரணம்
Despair -மனமுறிவு
Discourage -மனத்தளர்ச்சி
Disappointment -ஏமாற்றம்
Destruction - அழிவு
Debt - கடன்
Distress-துன்பம்
Disease -நோய்
Dead-மரணம்
Dim-தெளிவற்ற
Detained -தோல்வி
Depression - கலக்கம்
Drunkard -குடிகாரன்
Down- இறக்கம்
Divide -பிரிவு

Deny-மறுத்தல்
Decay-அழுகுதல்
Deceive -ஏமாற்றுதல்
Decrease -குறை
Dash-மோதுதல்
Dull-அசதி
Duel -சண்டை
Dust-மாசு
Dispute-கலகம்
Dminish-குறைவு
Disturb -தொல்லை
Doubt-சந்தேகம்
Debit -செலவு
Dormant -உறக்க நிலை
Drown-மூழ்குதல்

## குருவை ஏமாற்ற நினைத்தால்!...

பெருமைமிக்க வழக்கறிஞர் ஒருவர் தனது கிணற்றை ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவருக்கு விற்றார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, வழக்கறிஞர் ஆசிரியரிடம் வந்து, "ஐயா, நான் உங்களுக்கு கிணற்றை விற்றுவிட்டேன், ஆனால் அதில் உள்ள தண்ணீரை அல்ல. நீங்கள் தண்ணீரைப் பயன்படுத்த விரும்பினால், அதற்குத் தனியாகப் பணம் செலுத்த வேண்டும்" என்றார்.

ஆசிரியர் புன்னகையுடன், "ஆம், நானும் உங்களிடம் வரத்தான் இருந்தேன் என் கிணற்றிலிருந்து உங்கள் தண்ணீரை வெளியேற்றச் சொல்ல, இல்லையெனில் நாளை முதல் நீங்கள் என் கிணற்றில் உங்கள் தண்ணீரைச் சேமித்து வைப்பதற்கு வாடகை செலுத்த வேண்டும்" என்றார்.

இதைக் கேட்டதும், வழக்கறிஞர் பயந்து, "ஓ, நான் விளையாட்டுக்குச் சொன்னேன்!" என்றார். ஆசிரியர் சிரித்துக்கொண்டே, "மகனே, நான் உன்னைப் போன்ற பல குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்து அவர்களை வழக்கறிஞர்களாக்கியுள்ளேன்!" என்றார்.

கருத்து what is a saying மதியால் பொருள் ஈட்டலாம் சிறப்பு. ஆனால் வரம் கொடுத்தவர் வாயில் மண் போடாதேங்கோ!..

.............................................................................................................................

## பிறமொழித் தமிழ்ச் சொற்கள்...

01- பயம் - அச்சம்
02- பரீட்சை - தேர்வு
03- பிரச்சனை - சிக்கல்
04- புத்தி - அறிவு
05- போதனை - கற்பித்தல்
06- மந்திரி - அமைச்சர்
07- முக்கியம் - முதன்மை
08- விநாடி - நொடி
09- வேதம் - மறை
10- காகிதம் - தாள்
11- சிபாரிசு - பரிந்துரை

## கண்டங்களில் நாடுகள்...

1- ஆபிரிக்கா - 54 நாடுகள்

2- ஆசியா - 49 நாடுகள்

3- ஐரோப்பா - 44 நாடுகள்

4- வடஅமெரிக்க - 23 நாடுகள்

5- தென்னமெரிக்கா - 12 நாடுகள்

6- ஓசியான் - 14 நாடுகள்
அவுஸ்திரேலியா

## எதிர்ச் சொற்கள்....

01- சிரித்தல் - அழுதல்
02- ஆரம்பம் - முடிவு
03- வேண்டுதல் - விற்றல்
04- ஆரம்பம் - முடிவு
05- வெற்றி - தோல்வி
06- மேலே- கீழே
07- உள்ளே - வெளியே
08- மேல் - கீழ்
09- வடக்கு - தெற்கு
10- பகல் - இரவு
11- ஆம் - இல்லை
12- கொடுத்தல் - எடுத்தல்
13- வருதல் - போதல்
14- அழுத்தல் - இழுத்தல்
15- அனுமதி - மறுத்தல்
16- கட்டு - அழித்தல்
17- பேசுதல் - கேட்டல்
18- விருப்பு - வெறுப்பு
19- எறி - பிடி
20- அடக்கு - விலக்கு
21- உருவாக்கல் - அழித்தல்
22- முன்னணி - பின்னணி
23- வருகை - புறப்படு
24- அனுமதி - தடை
25- உண்மை - பொய்
26- சமாதானம் - சண்டை
27- திற - மூடு
28- உயர்ந்தது - குறைந்தது
29- சூடு - குளிர்
30- பெரிது - சிறிது



## ரகர, றகரச் சொற்கள்....

அரம் - ஒரு கருவி
அறம் - தருமம்

அரி - வெட்டுதல்
அறி - தெரிந்துகொள்ளல்

அரை - பாதி, அரைத்தல்
அறை - வீட்டு உள்ளிடம்

அரிவை - பெண்
அறிவை - அறிந்துகொள்

இரை - தீனி, உணவு
இறை - கடவுள்

இரங்கு - இரங்குதல்
இறங்கு - கீழே இறங்குதல்

## ஒத்த சொற்கள்....

பணம் - காசு
புத்தகம் - நூல்
ஆரம்பம் - தொடக்கம்
உண்மை - மெய்
சூடு - வெப்பம்
அம்மா - தாய்
அப்பா - தந்தை
காதல் - விரும்புதல்
கோவில் - ஆலயம்
வினா - கேள்வி

# கணக்குப் புதிர்போட்டிகள்...

### புதிர் - 1 -

A, B, C, D, E, F, G, H

ஆகிய சதுரப் பெட்டிகளில் வரவேண்டிய எண்களைக் கண்டு பிடித்தல் வேண்டும்...

.................................................................

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | x | 3 | - | 7 | = | B |
| + | | x | | + | | + |
| 13 | - | C | : | D | = | 11 |
| - | | - | | + | | + |
| E | - | 11 | - | 49 | = | F |
| = | | = | | = | | = |
| 9 | + | G | - | H | = | -28 |

A= B= C= D=
E= F= G= H=

### புதிர் - 2 -

இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் எந்தப் பக்கதால் கூட்டினாலும் கூட்டுத்தொகை 110 வரவேண்டும்

10 தொடக்கம் 34 வரையான எண்களை மட்டும் பயன்படுத்தலாம்..

| | | | | |
|---|---|---|---|---|
| | 18 | 26 | 19 | |
| 13 | | 30 | 25 | 15 |
| 31 | 29 | | 21 | 17 |
| 28 | 16 | 10 | | 22 |
| | 20 | 32 | 11 | |

## திரும்ப வராதவை........

1- தவறவிட்ட கல்வி

2- இழந்துவிட்ட இளமை

3- பேசிவிட்ட வார்த்தை

4- கடந்துவிட்ட நேரம்

5- உடலைவிட்ட உயிர்

## Six Best Doctors

1- தண்ணீர் - Water

2- ஓய்வு - Rest

3- உடற்பயிற்சி - Exercise

4- சீரான உணவுப்பழக்கம்- Balanced died

5- சுயமரியாதையான வாழ்க்கைமுறை Self Respect

6- நல்ல நட்புகள் - Real friends



# யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை - ஐரோப்பா
# வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட்
# 19 வது வருடாந்தத் திருக்குறள் மனனப் போட்டி - 2025

திருக்குறள், மனித வாழ்விற்கு வழிகாட்டும் உலகப் பொதுமறை. தமிழர் வாழ்வின் இலக்கணம் திருக்குறள். பெரும் சிறப்புவாய்ந்த திருக்குறளை, நம்பிள்ளைகள் அறிந்தும், படித்தும் பயனடைய வழிகாட்டும் நோக்கில் நடாத்தப்படும் போட்டியே, திருக்குறள் மனனப் போட்டியாகும். இப்போட்டியில் பிள்ளைகளைப் பங்குகொள்ளச் செய்து, திருக்குறள்வழி வாழ வைப்பதற்கும், தமிழ்க் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும் பெற்றோர்களும், பெரியோர்களும் ஒத்துழைக்க வேண்டுகின்றோம்.

ஒவ்வொரு பிரிவிலும் பங்குபற்றும் பிள்ளைகளில் கூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு, முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுக்குரிய வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படும். பங்குபற்றிய யாவருக்கும் பதக்கங்கள் வழங்கப்படும்.

போட்டிகள் 2025.11.15ஆம் திகதி, Zur Vielfalt 21, 44147 Dortmund என்ற முகவரியில் அமைந்துள்ள "தமிழர் கலையகம்" மண்டபத்தில் நடைபெறும். முடிவுகள் யாவும் அத்தினமே அறிவிக்கப்பட்டு, பரிசுகளும், பதக்கங்களும் வழங்கப்படும்.

விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி போட்டிக்கான அனுமதிக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். (ஒருவருக்கான கட்டணம் 12,- ஒயிரோ. குடும்பத்தில் ஒரு பிள்ளைக்குக் கூடுதலானவர்கள் பங்குபற்றும்போது, முதலாவது விண்ணப்பத்தாரர் தவிர்ந்த மற்றவர்களுக்கு முறையே 6.- ஒயிரோ). விண்ணப்பம் அனுப்பும்போதே பணம் அனுப்புதல் வேண்டும்.

போட்டிக்கான விபரங்களையும், விதிமுறைகளையும் நன்கு கவனித்து கொள்க. பிரிவுகளுக்கான வயதுக்கணிப்பை, போட்டியின்போது உறுதிப்படுத்த வேண்டும். அந்தந்த வயதுப் பிரிவுகளுக்குரிய குறட்பாக்களையே மனனம் செய்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி 2025.09.15ந் திகதிக்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும்.அனுப்ப வேண்டிய முகவரி:

P.Srijeevaghan
Gladbecker Str.265
45326 Essen

மேலதிக விபரங்களுக்கு
0201 46932106
0049 15757565305

**வள்ளுவர்தமிழ்ப்பாடசாலை - டோட்முண்ட்**

**பணம் அனுப்ப வேண்டிய வங்கி விபரம்:**

Tamilischer Bildungsverein Deutschland e.V

Bank:- Sparkasse Unna Kamen

IBAN:- DE914435 0060 0005 0533 35

# குறளும் பொருளும்...

## படைசெருக்கு..

771 - என்னைமுன் நில்லன்மின் றேவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.

772 - கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது.

773 - பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றுக்கா
லூராண்மை மற்றத னெ.ஃ.கு.

774 - கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

775 - விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னோட்டன்றோ வன்க ணவர்க்கு.

776 - விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து.

777 - சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

778 - உறுனுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற விலர்.

779 - இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுங்கிற் பவர்.

780 - புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

# குறளும் பொருளும்...

## படையினது நன்மை...

771- பகைவர்களே!..என் தலைவனுடன் போரிட்டு நடுகல் ஆனவர் பலர். அதனால் உங்கள் உயிர் உடலில் நிற்க விரும்பினால், எம் தலைவனிடம் போரிடுதலை விடுக.

772- காட்டில் ஓடிய முயல்மீது குறிதவறாமல் விட்ட அம்பைவிட யானைமீது பதியாமல் விட்ட அம்பே சிறந்தது. அதுபோல வலியற்றவரை வெல்வதைவிட வலிமை உள்ளவரை எதிர்ப்பதே மேலானது.

773- பகைவனிடம் கருணை காட்டாது போரிடுவதே ஆண்மை என்றும், போர்க்களத்தில் பகைவன் தாழ்வுற்ற பொழுது அருள் செய்வதே மேன்மை என்று கூறுவர்.

774- கையில் உள்ள வேலை யானை மீதுபாய்ச்சி வறிதே நின்ற வீரன். எதிர்த்து வரும் யானையைக் கொல்லத் தன் மார்பில் பாய்ந்துள்ள வேலைப் பறித்து வீசிச் சிரிப்பான்.

775- போர்க்களத்தில் வெகுண்டு நோக்கிய கண், அவர் விடும் வேலைக் கண்டு இமைத்தலும் வீரனுக்கு இழுக்காகும்.

776- தன் வாழ்நாளில் கழிந்த நாள்களைக் கணக்கிட்டு அந்நாட்களில் விழுப்புண் படாத நாள்கள் பயனற்றவை என வீரன் எண்ணுவான்.

777- உலகில் நிலைத்திருக்கும் புகழை விரும்பி உயிர் வாழ்வதை வேண்டாத வீரன் காலில் அணியும் கழல்அழகுச் சாதனமே ஆகும்.

778- போர் வந்தால் தன் உயிருக்கு அஞ்சாத வீரனை அவனது அரசன் சினந்து தடுத்தாலும் அவ்வீரனின் வீரம் குறையாது.

779- சூளுரைத்துப் போர்க்களத்துள் சென்ற வீரன் தன் சூளுரையை நிறைவேற்றாமல் இறந்த வீரச் செயலைத்தாழ்வாக எண்ணி நகைப்பவர் யார்?.

780- போரில் வீர மரணம் அடைந்தான் என்ற செய்தியைக் கேட்டு அரசன் கண்ணீர் விடும் நிலையைப் போர் வீரன் பிறரை யாசித்தாலும் பெறவேண்டும்.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



**உறுத்தல்:-**

சூரியனைப் பார்த்து நிலம் கத்தியது..சூரியன் அதிர்ச்சியுற்றான். இதுவரை அவனை யாருமே இப்படிக் கேட்டதில்லை. என்ன?..சொல்கிறாய். இருளை நீ மறைக்கலாம்?..சூரியன் திடுக்கிட்டான். ஒவ்வொரு ஒளியிலும் ஒவ்வொரு அழகு இருக்கிறது. உனக்குத் தெரியுமா?..ஞாயிறு முகிலுள் ஒளித்தான். நிலத்தின் குரல் அவன் காதில் ஓங்கி ஒலித்தது....

**"வெளிச்சத்தை மறைக்கலாமா?..வெளிச்சம்!.."**

**கறை:-**

கடைத் தராசில் பொருட்களை ஏற்றும் போதெல்லாம் தட்டு ஒரு பக்கம் சாய்ந்தது. படிக்கல் இருக்கும் தட்டு மேலேயே நின்றது. உருளைக்கிழங்குகளும் வெங்காயங்களும் இதை உற்றுக் கவனித்தன. "" ஓ இது கொடுமை" என்று கத்தியது உருளைக் கிழங்கு. வெளியே தலை நீட்டிக்கொண்டிருந்த வெங்காயமும் " இது பச்சைத் தீருட்டு" என்று வயிற்றெரிச்சலைக் கொட்டியது. இரண்டும் குரலெழுப்பின..

**" தராசை முதலில் எடை போடு '**

# குறுக்கெழுத்துப்போட்டி - 207
## (புரட்டாதி - ஐப்பசி 2025)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-05 ஒரு நாட்டின் முக்கிய துறைகளில் ஒன்று.
12-14 பறக்கும் பூச்சி இனம்.
15-16 இசைக்கருவி ஒன்று.
45-49 இவன் பேச்சு விடிந்தால் போச்சு என்று சொல்வார்கள்.
வ-இ
07-05 மாலைப் பொழுதை இப்படியும் கூறுவார்கள்
11-08 சக்கரவத்தியின் கவிகள் என்றும் போற்றப்படும். யார் இவர்.
18-16 குதிரைகளின் இருப்பிடம் இது.
45-43 பெண்ணின் ஒரு பருவம்.
கீ.மே
28-14 இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்று.
44-23 இலங்கையில் வறண்ட பிரதேசம் ஒன்று.
45-24 தமிழ்நாட்டில் பிரபல சஞ்சிகை ஒன்று.
47-05 இலங்கை வடபகுதியில் தொடரூந்தின் இறுதித்தரிப்பிடம்.
மே-கீ
01-36 இலங்கையில் இயற்கை வனப்புகளில் இதுவும் முக்கியத்துவமானது.
20-41 காட்டில் இவர் ராசாவானாலும் நீரில் இவர் ராசா இல்லை..
25-46 ஒட்டமுடியாது. ஆனால் அழகுசாதனத்தில் முக்கியமானது.
28-49 இலக்கியத்தில் இவனும் ஒருவன்

**(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)**

# புலம்பெயர் தமிழ்ப் பெண்கள்....

ஜெயா நடேசன் - யேர்மனி

ஒரு நாடும் அதன் மக்களும் மதிக்கப் படுவது அந்த நாட்டின் உயரிய கலாச்சாரம் மற்றும் பண்பாட்டில்தான் தங்கியுள்ளது. இன்று விஞ்ஞான வளர்ச்சியில் செழித்தோங்கியுள்ள அந்நிய நாடுகளின் மக்கள் நாகரீகமற்ற நாடோடிகளாக வாழ்ந்து வந்தபோது தமிழர் வாழும் பிரதேசங்களில் மிகச்சிறந்த கலாச்சார பண்பாட்டோடு மக்கள் வாழ்ந்து வந்ததாக வரலாற்றில் அறிவோம்.

இத்தகைய சிறப்போடு வாழ்ந்தவர்கள் புலம்பெயர்ந்தோர் பலர் நாகரீக மோகத்தால் கலாச்சாரத்தை தொலைத்து வாழ்கின்றனர். நமது பாரம்பரிய உடையாக சேலை சட்டை பாவாடைத்தாவணி என்பனவற்றை ஒதுக்கி வைத்து விட்டு ஆலயம் கோவில்களில் இடம்பெறும் ஆராதனைகளுக்கு இளையோர் பெரியோரான பெண்கள் தலை விரி கோலமாக செல்வதை பார்க்க கூடியதாக உள்ளது.அத்துடன் அரை குறை உடுப்புக்கள் காணக்கூடியதாக உள்ளன.

நடை,உடை,பாவனை என அனைத்திலும் மாற்றம் கொண்டு வாழ்கிறார்கள்.வெப்பம் காரணம் காட்டி தம் சுயத்தை இழந்து உடையிலே மாற்றம் கண்டு வாழ்கிறார்கள் வேலை உடையிலே மாற்றம்,உணவிலே மாற்றம், மொழியிலே மாற்றம் இவற்றையெல்லாம் தொலைத்த நிலையில் வாழ்கிறார்கள். நாகரீகத்தின் பெயரால் பெண்கள் ஆண்களைப்போல் இறுக்கமான ஒட்டையான ஜீன்ஸ் ரீசேட் அணிவதும் ஆண் பெண் என கணிக்க இயலாத அளவியே தமிழர் கலாச்சாரம் மாறிக் கொண்டே வருகின்றது. இன்றைய பொருளாதார நெருக்கடியில் வருமானம் பெருக்கும் நோக்கோடு பெண்கள் வேலைக்கு செல்கின்றனர்.

அதிக வேலைகளை ஓடி ஓடிச்செய்து ஆடம்பர செலவுகளில் பணத்தை செலவழிக்கின்றனர். பெண்கள் தம்மை குடும்பத்துக்கும் சமுதாயத்துக்கும் பங்கிட்டு கொடுத்து மாடாய் உழைத்து வீடுகளிலும் துன்பப் படுகிறார்கள்.இன்னும் சில பெண்கள் ஆண்களின் அடிமை வாழ்வில் சிக்கித் தவிக்கிறார்கள்.பெண்கள் குடும்பத்தின் ஒளி விளக்குகள். சமுதாயத்தின் கண்கள் இதனை மறந்து விடக்கூடாது.

பெண்களின் துணையின்றி வாழ முடியாத ஆண்கள் பெண்களை வன்முறையிலும் உளரீதியாகவும் பாதிப்படையச் செய்கிறார்கள்.இன்றைய நிலையில் பெண்கள் ஆண்களுக்கு மேலாக உழைக்கிறார்கள். வீட்டு வேலை கவனிப்பு, பிள்ளைகளின் கல்வி சம்பந்தமானதும் கலை சம்பந்தமான விடயங்களில் பெண்களே முக்கிய பங்கு வகிக்கிறார்கள்,

வாகனம் செலுத்துதல் கடை வியாபாரம் நடாத்தல் இதிலே முக்கிய பங்கு பெண்களே செய்து கொள்கிறார்கள். பல மொழிகளை படித்து முன்னேறி பல தொழில்களும் செய்து பேரும் புகழுடன் வாழ்கின்றனர்..

# விழு... எழு!.......

(சிறுகதை)

## (திரேஸ் மரியதாஸ்-லண்டன்)

அன்றொரு நாள் அந்த அழகிய காலை வழமைபோல அநுதினம் அவன் வாசிக்கும் அதே அமுதசுரபியான அந்தப் பருசுத்த வேதாகமம் அன்றும் அவனைத் தொட்டுத் தாலாட்டாமல் இருக்கவில்லை. கார் காலம் கடந்து விட்டது இப்போ வெய்யில்க் காலம் மட்டுமல்ல மழை பொழியும் வளமான காலம் பூக்கள் பூக்கிறது பழங்கள் கனிகிறது அன்பே வா விரைந்து வா ! என்ற வார்த்தை வாழ்வைத் தொடுகிறது.

அந்த வேளை சூழலும் தமது பங்குக்கு நிஜப்தமான அமைதி நீடிய நிம்மதி அதிலொரு நிறைவென அப்பப்போ அந்தக் கணத்தை உணர்ந்து இறைவா இயேசுவே இந்த நொடிவரை காத்தாயே போர்த்தாயே போவாசின் போர்வை போலவென நன்றி என்று சொல்லியே அன்றும் அமர்ந்தான்.

எப்போதுமே ஒரு தேடலோடு எதையாவது செய்ய வேண்டு மென்ற துருதுருப்போடு நிறைந்த வேட்க்கையோடு அவன் வாழ்க்கை ! எல்லோரும் தாயின் வயிற்றில்க் கருத்தரிக்கிறோம் எல்லோருமா பிறக்கிறோம் சிலர் முழுமையான உடல் உறுப்புகளின் இயங்கு தன்மையோடே சிந்தனா சக்தியோடு அவதாரந்தான் எடுக்கிறோமே ஒழிய அதனைப் பிறப்பென்று அவ்வளவு சுலபமாக ஒரு ஒற்றை வாரத்தைக்குள் அடக்கி முடக்க முடியாதேயென எண்ணங்கள் வண்ணங்களாக ஏதாவது இந்த உலகத்தில் எதையாவது செய்ய வேண்டும் அது அடுத்தவருக்கும் ஒரு சிறிய கொடுப்பனவாக அமைய வேண்டுமென்ற கனவு கண்களை இறுக மூடியல்ல விழித்தபடியே எல்லோரும் விழிக்க வேண்டும் செயற்கைஇருளே இருக்கக்கூடாதபடி ஒழுக வேண்டும என்ற முப்பால் அறிஞரின் திருவாக்கு அசரீரியாய் ஒலித்தது அவன் உள்ளத்தின் ஆழத்தில் மந்திரமாயே " இருளைப் பார்த்துப் பயந்து ஓடுவதை விட்டு நீ தீக் குச்சியாய் ஆவது இரு திருந்த மருந்தாய்" என்று அங்கங்கு கவி தைகள் , கருத்தாடுமன்றங்களில் கருத்திகளால்க் களமாடி சில-ரையாவது சிந்திக்க வைக்கிறாள் சின்னச் சின்ன விடயங்கள் எல்லாமே பெரிய மாற்றத்தை ஏற்படுத்துமென எண்ணியவனாய்

உண்மைதான் மக்களுக்காகத் தொடர்ந்து விழிப்புணர்வை சமூக அக்கறை கொண்டவர்கள் ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டுமென ஒவ்வொரு விடியலும் ஏதோவொன்றை நடுநிலமையோடு மக்கள் சுபீட்ச்சம் பெறுமட்டும் முன்பு போலவல்ல இது ஊடகக் காலம் ஒருவரும் பொய் சொல்லவும் முடியாது திருட்டு உருட்டு விடவும் முடியாதவாறு மக்களே விழித்தெழுங்கள்

நாம் பிழைகளை ஆமோதித்து அமைதி காக்கும்வரை நாட்டில் ஊழலும் ஒடுக்குமுறைகளும் தலைவிரித்து ஆடுவதை யாராலும் தடுக்கவே முடியாது

"அடிக்க அடிக்க அம்மியும் நகரும்"ஒரு வாழ்க்கை இயலுமா-னதை ஏனையோருக்கும் செய்வோம்

வளமாய் வாழ்ந்து எழு முழமாவது மகிழ என எண்ணும் அதே நேரம் கணீரெனப் பதிலுக்குத் தொலை பேசியின் மணிச் சத்தமும் சத்தமாய் ஒலிக்க - - -.

# விழாக்களும் வீணடிப்பும்!.......

-வசந்தா ஜெகதீசன் -

ஆங்காங்கே ஆயிரமாய் அடித்தளங்கள் உராயும்
ஆளுக்கொரு விழாவாகி அங்கீகாரம் துலங்கும்
விழாவெனில் விழுமியங்கள் காத்தொரு காலம்
வீணான செலவுகளில் ஆடம்பரமாகிறது ஞாலம்
நான் செய்த விழாவிலும் நீ செய்தல் வித்தியாசமாகும்
நறுக்கென்று நாலு படம் பிடித்து நீயும் போடும்
நாகரிக வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டென்று கூறும்
நாம் மட்டும் குறைந்தவரா குரோதங்கள் பேசும்
வீணடிப்பில் நேரங்கள் விரைந்து தான் ஓடும்
வீண்காசு பணமென்று செலவினங்கள் கூடும்
விழாவிற்கான விதிமுறைகள் வரம்பமைத்தார்-அன்று
விதிவிலக்காய் தகுதி காட்டி விழாச்செய்வார் இன்று
நம் கலையும் கலாச்சார விழுமியங்கள் ஒன்றிணைத்தல்-நன்று
நகலெடுத்த விழாக்கள் தான் நம்மினத்தில் -இன்று
ஏன் எதற்கு என்றறியா செலவினத்தில் சிக்கி
ஏட்டிக்குப் போட்டியாய் ஒன்றையொன்று விஞ்சிடுதல் கண்டு
ஏக்கமே நிறைகிறது என்னாகும் நாளைய தலைமுறை இன்று
எமதென்று உரிமையுடன் எதுவென்று கேட்டால்
நமதென்று நாம் செய்த விழாக்கள் ஏது செப்பு
அடுக்கடுக்காய் உணவு வகை அளவற்று அடுக்கி
எடுப்பவர்கள் அத்தனையும் தட்டினிலே நிரப்பி
அஞ்சாது போடுவார்கள் குப்பைபையில் கொட்டி-பார்த்திருக்க
பரிதவிக்கும் உணவின்றி ஏங்குவோரை எண்ணி
பாவமிந்த வீணடிப்பில் உழைத்தவர்கள் உதிரமதை மறந்து
உதாசீனமாகிறதே ஒரு நாளில் பணவிரயம் கரைந்து
ஆடைகளும் அணிகலனும் வீரியத்தைச் சுட்டும்
விதவிதமாய் படப்பிடிப்பு சமூகவலைத்தளங்களை தட்டும்
நாடறிய நடப்பு சொல்லும் நம்மினத்துப் பெருமை
நலிந்து வாழும் உறவுகட்கு தம்நிலமை கவலை
விழாக்களெனில் உறவுகளும் விருந்துகளும் மகிழ்ந்ததொரு காலம்
மாறியின்று தம்தகமைகளை காட்டுகிறார் விழாக்களில் வென்று
புகைப்படமும் வீடியோவும் பெயர்பொறித்த பெருமை
தகுதிநிலை சுட்டிடவே இவையும் தான் மகிமை
வேண்டாமே வீணடிப்பு விழாக்களின் தத்தெடுப்பு பாரும்
விடயங்களை உள்ளடக்கி விழுமியங்கள் காத்து
நாளைய தலைமுறைக்கு நல்வாழ்வைக் காட்டு
நம்வாழ்வு முன்னுதரணமாய் நல்மகுடம் சூட்டு!

# என்று தீரும்...

**- ஜெயா நடேசன் -**

வான் பரந்த தேசமெலாம்
வளமாக சிறந்து விளங்குகையில்
எம் தேசமே அழிவுப் பாதையில்
சிதைந்து மறந்து போகிறதே
உள் நாட்டு கடும் போரினாலே
உயிர் காக்க இடப்பெயர்வே
அகதி முகாம்களில் அடைப்பிலும்
அல்லற்பட்ட எம் உறவுகள் வதைப்பும்
தவறிப்போன எம் உடன் இழப்பும்

வெள்ளை வான்களில் ஏற்றி சித்திர வதையும்

இன்று வருவார் நாளை வருவார் எதிர் பார்ப்பும்

வருடங்களாக பல இடங்களில் மறைப்பும்

தேடித் தேடி அலைந்து உறவுகள் களைப்பும்

போராட்டங்களில் பெற்றோர் இறப்பும்

குழி தோண்டி உடல்களின் புதைப்பும்

செம்மணி தோண்டி எலும்புக் கூடுகளாக மீட்பும்

எலும்புக் கூடுகள் ஆவணங்களாக கணிப்பும்

உயிரோடு புதைத்த உடல்களும்

இளையோர் பள்ளி உபகரணங்களுடன் மீட்பும்

எம் மக்கள் அல்ல உலக மக்களுமே வியப்பும்

என்று தீருமோ தேடும் உறவுகளின் முடிவும்.....

# நிலநடுக்கம்...

(ரஷ்யா-30.7.2025)

அமைதியின்
இருண்ட இடைவெளி
மண்ணின்
மார்பு வெடித்தது..
மௌனமாய் விழுந்தது
நினைவின் கோபுரம்
நிமிடங்கள் மட்டுமே
எடுத்தன நெடுங்கால
கட்டிடங்கள் சாம்பலாக
கண்கள் தேடின
உயிர்களின்
ஓசையை..
பகலிலே இருள்
ஆடியது பிசாசாய்
உருண்ட பூமி
பாதையை
கேட்டதேயில்லை
யாருகும்
துயரத்தின்
துண்டுகள் எங்கும்
பரவின...
இறைவனே..!
இப்போதாவது
பதில் சொல்
மனிதன் ஏன்
மண்ணில்
இப்படியொரு
வேதனைக்கு
விலை கொடுக்க
வேண்டும்!..

**- கலை - மலேசியா -**

# ஆன்மாவின் வேண்டுதல்

- இரா சம்பந்தன் -

பொழுதெல்லாம்
பூமியை நனைக்கும்
அலைகள் போலவே பூதலத்தில்
நிலைத்திருக்க வேண்டும் .

விலங்குகள் கழற்றி வீசி
சுதந்திரக் காற்றாய் உலவிச்
சுவாசக் குழாய்களை
நிரப்பிட வேண்டும் .

கதிரொளி காணா வாசல்களில்
கண்ணீரத் துளிகளை
ஒற்றியெடுக்கும் கைக்குட்டையாய்
மாறிவிட வேண்டும் .

மனமெனும் தோட்டத்தில்
மணங்கமழும் பூக்களாய்க்
கவிதைப் பூக்கள்
பூத்துக் குலுங்கிட வேண்டும் .

முகமூடி தரிக்காமல்
முத்துநகை சிந்திக்
களங்கமிலா வதனத்தால்
காசினியைக்
கவர்ந்திழுக்க வேண்டும் .

விளைநிலம் விளைச்சலுற
விவசாயி மனங்குளிர
விண்ணின் துளிகளாய்
வீழ்ந்திட வேண்டும் .

குருதியின் சுவடுகள் படியாத
வரலாற்றுப் பக்கங்களை
கண்களால் கண்டு
களிப்பினில் மிதந்திட வேண்டும் .

புடவியைப் பரிபாலனம் செய்பவன்
மீண்டுமொரு பிறப்பை
என்மேல் திணிப்பானேல்
யானங்கே வேண்டுவது
கவிதையின் பிரவாகம் !

மரணத்தின் பாயில்
மல்லாக்காய் படுக்கையிலே
ஒருசில நிமிடங்களில்
உயிர்த்துளி கசிந்திட வேண்டும் .

அடுப்பெரியாக் குடிசைகளும்
பற்றியெரியும் வயிறுகளும்
இருநிலத்தில் இல்லாமல்
திருவிளங்கும் பூமி வேண்டும் .

வல்லார்க்கு தலைவணங்கா
நிமிர்வோடு எந்நாளும்
இல்லார்க்கு ஈந்திடும்
உள்ளம் வேண்டும்...

# குறுங்கவிகள்...

புவிராஜ் - நோர்வே

1-
இருக்கிறதோ
இல்லையோ
இல்லை என்னும் அளவுக்கு
எடுத்துக்கொள்ள சொல்கிறாள்
இதயத்தை...

2-
அவளை
மறப்பதற்காய்
மருந்து செய்கிறேன்
மர்மம்
மருந்து அவளை எனக்குள்ளே
வளர்த்து விட்டது...

3-
வாழ்நாளில்
ஆயிரம் முறை கண்டிருப்பேன்
பௌர்ணமி நிலவை ஆனாலும்
நினைவில் தனிமையில் ஒருமை
ஆனா பொழுதுகள் தான்...

4-
இன்று
வழக்கத்தில் இல்லை திருத்தி
திருத்திகை பிடித்து
எழுதுகிறேன் அவளுக்கான
கவிதையில் ஓர்
ஆசார கோவை ...

5-
தனிமையின் கொடுமையில்
தவிப்பதை
காட்டிலும்
காதல் பிரிவின்
நரகத்தில்
வாழ்வது மேல்...

6-
ஒரே வஞ்சகம்
செய்கிறாள்
எனக்கான முத்தங்கள்
அனைத்தையும்
என் பிள்ளைக்கு கொடுத்து...

7-
உனக்கு முன் நான்
எனக்கு பின் நீ
சொர்க்கத்தில் கூட
நான் தாங்கிக்கொள்ள வேண்டும்...

8-
பொய்யாய் கடந்து போவதற்கு
முன்
மெய்யாய்
காதலிக்கிறேன்
அதனால் கவிதை
எழுத வரவில்லை...

9-
தேடலுக்கு
உண்டான சுகம் தென்படுதலில்
கூடுவதில்லை.
காதல் தேர்வுச்சீட்டின்
வினாத்தாள்போல் அளிக்கப்படும்
விடையை பொறுத்தே மதிப்பு
கூடுகிறது...

10-
நெடிய பயணம்
நீடித்த பாதை
வழி முழுதும்
அவள் நினைவு அசதிக்கோ
அயதிக்கோ ஆளாகவில்லை...

11-
பொய்கள் மட்டும்
கவிதை என்பது ஏன் வார்த்தை
யாலம் பூசுவேதாலோ...

12-
மறந்து விடு
இருக்க முடிவதில்லை
அடிவயிற்றைக் கிள்ளி
நினைவுடுகிறது பசி என்ற
எதிரி...

# செம்மணி...

-திருமதி கலைவாணி ஏகானந்தராசா-

மரணத்தின் வடுக்களை மனதிலே சுமக்கிறோம்
மறக்க முடியாது தினமும் தவிக்கிறோம்
அரக்கர்கள் கொன்று குவித்த எச்சங்கள்
ஆண்டுகள் கடந்தாலும் இதயத்தில் ரணங்களாய்...

பரபரப்பாய் இன்று உலகமே பேசிடும் செம்மணி
பல ஆண்டுகள் கடந்தும் பதறுகிறதே எம் நெஞ்சம்
அரசாங்கம் மூடிமறைத்த அசிங்கத்தை இன்று
அறுபத்து மூன்று என்புத் தொகுதிகள் நிரூபித்தன..

தமிழரின் நாகரீகம் புதைந்தது கீழடியில்- ஈழத்
தமிழரின் உயிர்களோ புதைகுழி செம்மணியில்
கிருஷாந்தி செய்த தவறுதான் என்ன ?
பருவ வயதில் பாடசாலை சென்றது தவறா?....

மிருகங்கள் அவளை பாலியல் சித்திரவதைப்படுத்தி
மிலேச்சத் தனமாய் கொன்று புதைத்தனர்
பிள்ளையை தேடிச்சென்ற முழுக் குடும்பமுமே
புதைகுழிகளில் எலும்புக் கூடுகளாய் இன்று...

கற்பிணிப் பெண்கள் முதல் கல்லூரி மாணவர்வரை
குற்றமற்ற வயோதிபரும் குடும்பத் தலைவர்களும்
கற்பிதமாய் குற்றஞ்சுமத்தி குழிகளில் மூடினர்
அற்ப பிறவிகளான ஆமிக் கூலிப்படையினர்...

தேடி அலைந்த உறவுகளின் சத்திய வேள்வி
தோண்டத் தோண்ட வெளிவரும் என்புக் கூடுகள்
கூடிக் கோஷம் எழுப்பினோம் தமிழினமே -எம்
குரலுக்கு கிடைக்குமா நீதி புலம்புகிறோம்..

..............................................................................................................................

## நினைவு நாள்!..

இன்று அம்மாவின் நினைவுநாள்
மேசை முழுவதும் காய்கறி
சாப்பிட ஆட்களில்லா வீடு
நானும் மனைவியும்தான்
பிள்ளைகள் யா

## கூட்டம்!..

மதுவும் மாதும் விழாவில்
மாமிசமும் ஒன்று சேர்ந்து
கூடிக்குடித்துக் கொண்டாடி
மத மாற்றம் செய்திடவே
அலைந்து திரியும் கூட்டம்!...

- சிவா -

## தியாக தீபம்!...

**- கீத்தா பரமானந்தன் -**

ஊரெழு பெற்றெடுத்த
உத்தம தீரன்
ஊருக்கு வாழ்வளிக்க
உயிர் உருக்கியே
உவமை இன்றி
ஒளிகொடுத்த தீபம்!
உலகமே வியக்கும்
ஒப்பற்ற தியாகம்!

மருத்துவ மாணவனாகியும்
மகத்தான மொழிப்பற்றில்
விருப்போடு களம்புகுந்து
விடுதலை வீரனானாய்!
அமைதியின் பெயரிட்ட
அராயகப் படைகளிடம்
ஐந்து கோரிக்கைக்காய்
அகிம்சை வழியினிலே
அறத்தினை உரைக்க!..
உண்ணா நோன்பிருந்தாய்!

கிஞ்சித்தும் இரங்காது
கிராதகப் படைகள்
வஞ்சித்து உயிரெடுத்து
வரலாற்றில் தலைகுனிந்தார்!
தேரோடும் வீதியிலே
ஊரே திரண்டிருக்கப்
பன்னிரு நாள் யாகத்தில்
இன்னுயிரை ஈந்தாய்!

புரட்டாதி இருபத்தி ஆறில்
பார்த்தீபன் உயிரும்
பார்த்திருக்க ஆகுதியாகிடப்
பூவுலகில் புதுப்பரணி கண்டது!
ஆண்டுகள் மூப்பத்தேழு
அவசரமாய்ப் போனாலும்
என்றும் உமக்காக
ஏற்றுகிறோம் தீபங்கள்!
போற்றுகிறோம் வரலாறாய்ப்
புகழ்பூத்த உம் தியாகம்!



## தியாகச்சுடர்!..

ஈடில்லா தியாகச்சுடர் நீ
ஈழ மண்ணின் வேந்தன் நீ
ஈழப் போராட்ட வீரன் நீ
ஈவிரகமற்றே அழிந்தவன் நீ

அகிலத்தின் அழியாப்புகழ் நீ
அகிச்சை வழிகாட்டியும் நீ
அன்பைக் கொட்டியவனும் நீ
அனைவரையும்அழவைத்தவனும் நீ

மரணிக்காத மைந்தனும் நீ
மரணத்தை வென்றவன் நீ
மண்ணின் மைந்தனும் நீ
மறக்காத அகிம்சை வாதியும் நீ

தேரோடும் நல்லூரில் நீ
தேவாரம் பாடியவனும் நீ
தேய்ந்து அழிந்தவனும் நீ
தேன் தமிழ் மைந்தனும் நீ

**- இராஜேஸ் -**

## கூலி...

கருத்தரங்க மண்டபம்
வெறிச்சோடி கிடக்கிறது
திரையரங்கு நிரம்பி வழிகிறது.!
கல்வி என்ற சொல்லுக்கு
வீசும் தென்றல் கூட
கதவு திறக்கக் காத்திருக்கிறது
ஆனால் சாவி
திரையரங்கு திறக்கச் சென்றது..
அறிவு விலை இல்லாதது.
சினிமா உயிர் குடிக்கும் போதை
கல்வியைப் பின் தள்ளி
சினிமாவுக்கு ஓடும் கூட்டம்..
நம் இனத்தின் எதிர்காலம்
தியேட்டர் முன் தொங்கவிடப்படும்
விளம்பர பதாகை போல
பழுதாகித் தொங்குகிறது..
கைக்குள் டிக்கெட்,
இதயத்தில் இருள்.
“கூலி“யின் முதல் நாள் காட்சிக்கு
பள்ளிப் பிள்ளைகளோடு
விரையும் பெற்றோர்..
அறிவின் ஆக்கத்திற்கு
வழி காணாத “கூலி“ இனம்.
பொய்யான வண்ண விளக்குகளில்
மயங்கி சிக்கிச் சீரழிகிறது..
படம் ஒரு நாள் கூத்து
சமூகம் முன்னேற்றம்
வாழ்நாள் கூத்து
பிள்ளைகளின் எதிர்காலம்
சினிமா தியேட்டரில் முடக்கமா?
தமிழர் சமூகம் விழிக்குமா?

## அறிந்து பழகும் நெறி

பழகும் முன் புரிந்து கொள்
புன்னகை மனிதரின் முகமூடி
அதன் பின்னால்
இருப்பது பாசமா? வஞ்சகமா?
ஆழம் அறி! ஆற்றில் இறங்கு!
ஊரடங்கின்றி
நம்மைத் தேடி வரும் உறவு
வேலியில்லாப் பயிர்!
நம் மனம்
காவலின்றி பாதையாகும்...
நாம் அறியாத நட்பு
நெருப்பு
தொடர்ந்தால் பகை
பொல்லாப்பு புகையில்
மூச்சு திணறலாம்
எரிந்து கருகலாம்..
நம்மை
எப்படி நோக்குகிறார்?
யார் திசையில் பயணம்
எனத் தேர்ந்து தெளிவது அறிவு
வெளிப்படை வார்த்தைகள்
வெளிச்சமல்ல
வழிகாட்டியும் அல்ல..
விமர்சனப் பார்வையில்
பட்டாம் பூச்சியைப் போல
பிரச்னைகள்
பறந்தோடி விடும்..
புன்னகையைத்
தேடி பழகாதே,
அறிந்து அருகில் செல்
அன்பாக சொல்!

**சத்யா**
**பிரான்சிஸ் - மலேசியா**

## அவதி....

அவதி அவதி எனும் அவதி
அவசரம் அவசரமாகவே
சுதியாகக் கடுகதி ஏறிடத்
துதிபாடும் வாழிட மானிடர்
படும்பாடு பெரும்பாடானதே
கெதி கெதி என்னும் கெதியில்
கடுகடுப்புக் கெடுவோடே
குடுகுடுவென நுழைந்த
படபடப்பில் உருப்படாது
அகப்படாது போனதே
மதி முட்டும் மன அழுத்தமதில்
சதி ஊட்டும் உயரழுத்தமதில்
கடகடவென உடனே காரியம்
செய்யாது நாளை நாளை எனத்
தள்ளித் தள்ளிப் போடும் சேதியில்
முந்திய ஆர்வம் கடுகடுப்பானது
தவிர்க்கப் பஞ்சி விடுத்து எஞ்சியதை
அள்ளி எடுத்து அஞ்சாது அதைச்
செய்து முடிக்க நடுங்கும் பயமும்
அற்றுப் போகுமே .

## சின்ன வயதில்....

சின்ன வயதில் சீர் வரிசை
பென்னம் பெரிய பிணைப்பு
முன்னம் செய்த அருட்கொடை
அன்னமூட்டித் தானுண்ட தந்தை
கன்னம் நோகுமெனக்
கண்ணுக்குள் கண்ணாக
அரவணைத்த அன்னை
சின்னக்குட்டி செல்லக்குட்டி எனச்
சீவிச் சிங்காரித்து நெற்றியில்
பொட்டும் விதம் விதமான உடுப்பும்
போட்டு அழகு பார்த்த அக்காமார்
இன்னுமென்னென்ன வேண்டுமோ
சொன்னவுடன் வாங்கித் தந்து
தென்னங் குரும்பையில் தேர்
செய்து ரயர் உருட்டி எங்கள் வீட்டு
மகாராணி எனத் தோளில் சுமந்து
விளையாட்டுக் காட்டிய
அண்ணாமாரும் சின்ன வயதில்
எனக்குக் கிடைத்த ஆனந்தம்
பேரானந்தம் பேரானந்தமே .

**- ராணி சம்பந்தர் - யோர்மனி**




## மண் சஞ்சிகை இதழ்-232 அட்டைப்படக் கவிதை:

ஆண்டுகள் ஐம்பதைத் தாண்டி
அரியசேவை ஆற்றியதால் நீண்டவுன்
பணியினைப் பாராட்டியே - ஈண்டு
அமுதவிழா கமழ்ந்திடும் அறிஞர்குழா
மரங்கமே குமுதமாய்ப் பூத்தது குவிந்து.

பூசிக்கும் தமிழோடு புலம்பெயர் பரீசிலும்
நேசிக்கும் ஈழநாட்டை நிலைநிறுத்தி
காசிலிங்கம் வாசிப்பினை வற்றிடாமல்
வரலாறு படைத்தமையால் ஆசியினை வழங்குது அகிலம்.

ஊடகத்துறையிலே உயரங்களைத் தொட்டமையால்
பூடகமாகிடும் ஈழக்குடியின் வரலாற்றை
ஊடகராய்ப் புலத்திலும் தெளியவைத்து
பொறித்திட்ட சேவையினுக்கு நிலத்திலும் பாராட்டு நிறைந்து.

என்னுள் என்னோடு என்னும் நூலை வடிவமைத்துத்
தன்னுள் ததும்பிய அனுபவத்தினை
பொன்னாய் வாழ்வியலின் தன்பதிவாய் வடிவமைத்த
பெருமகனை வாழ்த்திய மண்மலர் வாழ்க .!

**-அம்பலவன்புவனேந்திரன்..**

# சுயநலமும் பொதுநலமும்!..

சுற்றுச் சூழலைக் காத்திடவே
சுழலும் பூமியின்று தவிக்கிறது
கற்றுக் கொண்டதை மறந்தின்று
காசுக்கே மானிடம் ஓடுகிறது
சற்றேனும் சந்ததியை நினையாது
சம்பாதிப்பதில் தானேது பயன் ..?

சுற்றம் உறவு சொந்தமெல்லாம்
சுவடுகளற்றுப் போவதற்குள்
மற்றவர் வலியினை உணராது
மாயவுலகில் மிதக்கும் மானிடமே
சற்றே மனிதத்தை எண்ணிப்பார்
சகலமும் சகத்தினில் நிலைத்திடுமோ..?

வெற்றுக் குடுவை குப்பைகளை
வீணே வீதியில் எறிவதுமேன்
இற்றுப் போய்விடா நெகிழிகளால்
இன்னும் பெருகும் கேடுகளே
வற்றிப் போகும் நீர்நிலையொடு
வளங்களை காத்தல் வேண்டுமன்றோ.

தொற்று நோயும் கிருமிகளும்
தொடராய் நீளும் வைரசுகளும்
நாற்றில் தெளிக்கும் நாசினியால்
நச்சுக் கலந்த காய்கனியும்
ஈற்றில் புசிக்கும் உணவுகளால்
இடரில் மானிடம் உழலுவதோ.?

"நெற்றில்" சுழலும்
வாழ்க்கையினால்
நீளும் கொடுமைகளை உணராது
முற்றும் துறந்த முனிவர்களாய்
முதுமையை எண்ணிடாத்
தலைமுறையும் குற்றம்
இழைப்பதையும் நினையாது
குடி வெறி போதையில்உழலுவதோ..?

காற்றில் கலக்கும் மாசுகளால்
கனக்கும் சுவாச வியாதிகளும்
ஆற்றில் ஆழியில் கழிவுகளால்
அழியும் உயிர்களுக்கு அளவேது
மாற்றம் ஒன்றுதான் மாறாதது
மானிடனே உனைநீ மாற்றிடுவாய்..!

**-அம்பலவன்புவனேந்திரன்.**

# சுகாதாரக் குறிப்புகள் சில...

1- ஜேர்மனியில் 81% மக்களுக்கு முதுகுப பிரச்சைனகள் உள்ளன. கணக்கெடுக்கப்பட்டவர்களில் பாதிப்பேர் தடுப்பு நடவடிக்கையாக தொடர்ந்து உடற்பயிற்சி செய்வதாகக் கூறினார்கள் .

2- 75% ஜேர்மனியர்கள் அறிந்திருக்கிறார்கள் வயிற்றுத்தசைப் பகுதி (Bauch-muskulatur) பலவீனமாக இருந்தால் முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள் ளது.

3- 33% டைப் 1 நீரிழிவு (Typ 1 Diabetes) நோயாளிகள் ஒழுங்கற்ற உணவுப் பழக்கத்தால் பாதிக்கப்படுகன்றார்கள் .

4- கடந்த வருடம் குறைந்தது ஒரு முறையாவது 81% ஜேர்மனியர்களுக்கு முதுகுவலி ஏற்பட்டுள்ளது. இங்கு 2வது தொழில் ரீதியான இயலாமைக்கு காரணம் தசைக்கூட்டுவலி (Bewegungsapparat) ஆகும் .

5- தொழில் இயலாமைக்கான பின்வருவன காரணங்களாகக் கருதப்படுகின்றன. மனநோய் / நரம்புகள் . 37% , தைசக் கூட்டுவலி. 24%, விபத்துக்கள் .13%, புற்றுநோய் . 10% ,இதயம் / சுற்றோட்டப் பிரச்சனைகள் . 8%, உள் நோய் .4%, மற்றவை. 4%

6- 62% ஜேர்மனியர்கள் தங்கள் முதுகு ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை என நம்புகின்றார்கள் .

7- முதுகுவலி நோயைத் தடுப்பதற்கு என்ன செய்ய முடியும் விளையாடுவதன் மூலம் உடல் ஆரோக்கியமாக வைத்திருக்கலாம் .ஒவ் வொரு மணி நேரத்திற்கும் ஒரு முறையாவது நாற்காலியல் இருந்து எழுந் து, உடலை நீட்டி தோள் மூட்டை வட்டமிடுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் .இடுப்பு மாடிபயிற்சிகள் (Beckenbodentraining) முக்கியம் .

8- 39% ஜேர்மனியர்கள் நன்றாக தூங்குவதற்காக மருந்துகள் பயன்படுத்துகின் றார்கள் .

9- தற்போதைய OECD புள்ளி விவரங்களின்படி ஜரோப்பாவில் ஒரு தனி நபர் ஒரு ஆண்டில் சராசரி 9,9லீட்டர் மதுபானம் பயன் படுத்துகின்றார் . சற்று அதகமாக ஜேர்மனியில் ஒருவர் ஒரு ஆண்டில் 11,6 லீட்டர் மதுபானம் பயன்படுத்துகின்றார் . ஆனாலும் ஓப்பிடும் போது தற்போது பயன் பாடு தெளிவாக குறைந்துவிட்டது. இந்தச் சரிவுக்கு ஒரு காரணம் இப் போது அதிகரித்த சுகாதார விழிப்புணர்வு ஆகும் .

10- ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையால் எத்தனை வருடங்கள் செலவாக்குகின்றான் மனிதன்..

ஆண்கள் -- பெண்கள்

9.4. கடுமையான புகைபடித் தல் . -7.3

3.1. உடல் பருமன் . -3.2

3.1. அதிக மது நுகர்வு. -1.0

1.4. சிவப்பு இறைச்சி நுகர்வு. -2.4

1.3. குறைவான பழங்கள் மற்றும் காய்கறிகள் -0.8

90% ஜேர்மானியர்கள் ஒலி மாசுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் .

2023ஆம் ஆண் டு புதுப்பிக்கக்கூடிய சக்தியால் (erneuerbare Energie) 250 Mio.t CO2 சேமிக்கப்பட்டது.

## சுகாதார சிறிய குறிப்புகள்...

**மொழிபெயர்ப்பு......**
**செல்வி சாமினா சிவதாசன்**






01- 100 000 Menschen pro Jahr in Deutschland einen Herzschrittmacher.
ஒவ்வொரு ஆண்டும் ஜேர்மனியில் 100 000 மக்களுக்கு இதயமுடுக்கி (Herzschrittmacher) வைக்கப்படுகின்றது.

02- 30% der erwachsenen Bevölkerung raucht in Deutschland im vergangenen Jahr. Nikotin erhöht die Insulinresistenz und somit auch das Diabetesrisiko.
கடந்த ஆண்டு ஜேர்மனியில் 30% மக்கள் புகைப்பிடித்தனர். நிக்கோட்டின் இன்சுலின் எதிர்ப்பை அதிகரிப்பதால் நீரிழிவு ஏற்படும் அபாயம் உண்டு.

03- 30% der Betroffenen wissen nichts von ihrem Bluthochdruck.
உயர் இரத்த அழுத்தால் (Bluthochdruck) பாதிக்கப்பட்டவர்களில் 30% மக்கள் தங்கள் நோய் பற்றி அறிந்திருப்பதில்லை.

04- 47% der Deutschen sind mit ihrer Erscheinung unzufrieden> weil sie denken> dass sie übergewichtig sind.
47% ஜேர்மனியர்கள் தங்கள் தோற்றத்தில் திருப்தி இல்லாமல் இருக்கின்றார்கள்.ஏனெனில் அவர்கள் அதிக எடை கொண்டவர்கள் என்று நினைக்கின்றார்கள்
.

05- 75% der Erwachsenen in Deutschland sind von Fußproblemen betroffen.
ஜேர்மனியில் 75மூ பெரியவர்களுக்கு கால் பிரச்சனைகள் இருக்கின்றது.

06- 55% der Deutschen vertrauen darauf> dass ihr Arzt und ihr Apotheker wissen> was das Beste für sie ist. Europaweit tun dies nur 48%.
55% ஜேர்மனியர்கள் தங்கள் மருத்துவருக்கும் மற்றும் மருந்தாளர்களுக்கும். தங்களுக்கு எது சிறந்தது என்று தெரிந்து இருப்பார்கள் என நம்புகின்றார்கள். ஆனால் ஐரோப்பா முழுவதிலும் 48% மக்கள் மட்டுமே இவ்வாறு நம்புகின்றார்கள்.

07- 16 Millionen Deutsche klagen über chronische Schmerzen.
16 மில்லியன் ஜேர்மனியர்கள் தொடர்ந்து நீடிக்கும் அல்லது மீண்டும் மீண்டும் வரும் வலியால் (chronische Schmerzen) வேதனைப்படுகின்றார்கள்.

08- 49% der Menschen in Deutschland hatten in einem Zeitraum von 12 Monaten einen Sonnenbrand.
ஜேர்மனியில் வாழும் 49% மக்களுக்கு கடந்த 12 மாதங்களில் வெயில் எரிவு (Sonnenbrand) ஏற்பட்டது.

09- 14% aller Schwangeren weltweit sind von einem Gestationsdiabetes betroffen. Dieser birgt das Risiko von Frühgeburten und Geburtskomplikationen.
உலகில் 14% கர்ப்பிணிப் பெண்கள் கர்ப்பகால நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகின்றார்கள்.இது முன்கூட்டி பிறப்பு மற்றும் பிறப்புசிக்கல்களின் அபாயத்தை அதிகரிக்கின்றது.

10- 40% der Muskelmasse büßen wir ohne Sport bis zum Alter von 80 Jahren ein 82% der Deutschen besitzen einen Smartphone _ ein steter und starker Ablenkungsfaktor.
82% ஜேர்மனியர்கள் ஒரு ஸ்மார்ட் கைத்தொலைபேசி / திறன்பேசி (Smartphone) வைத்திருக்கின்றார்கள்.

11- 3.2 Millionen Menschen in Deutschland praktizieren häufig Yoga. Weitere 8.2 Millionen geben an,es ab und an zu tun.
ஜேர்மனியில் 3,2 மில்லியன் மக்கள் அடிக்கடி யோகா பயிற்சி/ யோகாசனம் செய்கின்றார்கள்.
மேலும் 8,2 மில்லியன் மக்கள் அவ்வப்போது இதனை செய்வதாகக் கூறுகின்றார்கள்.



# கொய்யாப்பழம்....

தினமும் ஒரு ஆப்பிளை சாப்பிட்டால் மருத்துவரை பார்க்க தேவையில்லை என கூறக்கேட்டிருப்போம். ஆனால் ஆப்பிளை விடவும் அதிக சத்துக்கள் கொண்டது கொய்யாப்பழம்.
100 கிராம் கொய்யா பழத்தில் சுமார் 300 மில்லிகிராம் விட்டமின் சி சத்து உள்ளது.
நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துவதில் தொடங்கி எண்ணற்ற நன்மைகளை வழங்குகின்றன.
விட்டமின் சி, விட்டமின் பி6, விட்டமின் ஏ, மெக்னீசியம், புரதம், கார்போஹைட்ரேட், பாஸ்பரஸ், கால்சியம், இரும்புச்சத்து, பொட்டாசியம் நிறைந்திருக்கிறது.
செரிமானத்தை மேம்படுத்துவதுடன் மலச்சிக்கல் பிரச்சனைக்கு தீர்வளிக்கிறது, இதிலுள்ள நார்ச்சத்து உடல் எடையை குறைக்க உதவுகிறது, குடல் புண்ணை ஆற்றும் தன்மை கொண்டது.
கொய்யாப்பழம் நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்றது, சர்க்கரை அளவை கட்டுக்குள் வைக்கிறது.
நுண்ணுயிர் எதிர்ப்பு மற்றும் அழற்சி எதிர்ப்புப் பண்புகள் உள்ளதால் சருமத்திற்கு நல்லது. இதிலுள்ள பொட்டாசியச் சத்து ரத்த அழுத்தத்தை சீராக்கக்கூடியது, மெக்னீசியம் நரம்புத்தளர்ச்சியை போக்கும்.
விட்டமின் சி அதிகம் என்பதால் சளித்தொந்தரவுகளுக்கு தீர்வளிக்கிறது, உடம்பிற்கு குளிர்ச்சியை கொடுக்கக்கூடியது.
அதன் பாலிபினால்களில் காலிக் அமிலம், எலாஜிக் அமிலம் மற்றும் பல்வேறு ஃபிளாவனாய்டுகள் உள்ளன.இந்த சேர்மங்கள் செல்களை சேதத்திலிருந்து பாதுகாக்கின்றன.



# நெல்லிக்காய்....

நெல்லிக்காய் வைட்டமின் சி, குர்செடின் மற்றும் எலாஜிக் அமிலத்தைக் கொண்டுள்ளது, இது வீக்கத்தைக் குறைக்கவும் புற்றுநோயைத் தடுக்கவும் பெரிதும் துணைப்புரியும்.புற்றுநோய் மருந்துகளுடன் இணைந்து அவற்றின் செயல்திறனை மேம்படுத்தவும் பக்க விளைவுகளைக் குறைக்கவும் இதைப் பயன்படுத்துவது நன்மை பயக்கும்.
தினம் ஒரு நெல்லிக்காய் சாப்பிடுவதால், ரத்தம் சுத்தமாவதோடு, ரத்த அணுக்களின் அளவு அதிகரித்து, ரத்த சோகை நீங்கும். இதயத் தசைகள் வலிமையடைந்து, இதய நோய்கள் வருவது தடுக்கப்படும். மேலும் உடல் எடையை கட்டுக்குள் வைக்க பெரிதும் உதவுகின்றது.
கண் பிரச்சினை உள்ளவர்கள், தினமும் ஒரு நெல்லிக்காயைச் சாப்பிட்டு வந்தால், கண்களில் ஏற்படும் எரிச்சல், கண்களில் இருந்து நீர் வடிதல், கண்கள் சிவத்தல் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு கொடுக்கும்.
தினசரி ஒரு நெல்லிக்காய் சாப்பிடுவது சரும பொலிவை அதிகரிப்பதுடன், கூந்தல் உதிர்வை கட்டுப்படுத்தி அடர்த்தியான மற்றும் கருமையான கூந்தலை பெற உதவும்.
விட்டமின் சி அதிகம் என்பதால் சளித்தொந்தரவுகளுக்கு தீர்வளிக்கிறது, உடம்பிற்கு குளிர்ச்சியை கொடுக்கக்கூடியது.
இதில் உள்ள விட்டமின் ஏ கண் ஆரோக்கியத்தை காக்கிறது, பார்வைக் குறைபாட்டை தடுக்கிறது, கண்புரை அபாயத்தையும் குறைக்கிறது.
காலை உணவுக்கு பின்பும், மதிய உணவுக்கு முன்பும் கொய்யாப்பழம் சாப்பிடுவது நன்மையை தரும்.
மிக எளிதாக அனைத்து காலங்களிலும் கிடைக்கும் கொய்யாப்பழத்தை தினமும் ஒன்று வீதம் சாப்பிட்டு வந்தால் ஆரோக்கியமாக வாழலாம்.



# வெண்டிக்காய்

வெண்டிக்காய் சாப்பிடுவதால் கிடைக்கும் 6 அற்புத நன்மைகள்: என்னென்ன தெரியுமா?
நம் அன்றாடம் சாப்பிடும் வெண்டைக்காயில் பல்வேறு ஆரோக்கிய நன்மைகள் உள்ளன.
வெண்டைக்காய் நார்ச்சத்து, வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் ஆக்ஸி ஜனேற்றிகளின் நல்ல மூலமாகும்.
சர்க்கரை நோய், மலச்சிக்கல் போன்ற பிரச்சனைகளுக்கு வெண்டைக்காய் ஒரு சிறந்த தீர்வாக கருதப்படுகிறது.
அந்தவகையில், வெண்டைக்காய் சாப்பிடுவதால் கிடைக்கும் 6 அற்புத நன்மைகள் குறித்து பார்க்கலாம்.
கிடைக்கும் 6 நன்மைகள்

1. உடலில் இல்ல இரத்த சர்க்கரையை கட்டுப்படுத்துகிறது.
2. டைப் 2 நீரிழிவு நோயாளிகளுக்கு வெண்டைக்காய் சிறந்தது.
3. செரிமானம், ஹைட்ரேஷன் மற்றும் மெட்டபாலிசத்துக்கு உதவுகிறது.
4. அதிக நார்ச்சத்து உள்ளதால் எடை குறைய உதவுகிறது.
5. இரத்த அழுத்தத்தையும், இதய ஆரோக்கியத்தையும் பராமரிக்கிறது.
6. வயிற்றின் பாதுகாப்பை மேம்படுத்தி, அல்சர் குணமடைய உதவுகிறது.

வெண்டைக்காய் நீரின் பயன்கள்
அதற்கு 2-3 புதிய வெண்டைக்காயை எடுத்து, அவற்றை நன்கு கழுவி, முனைகளை வெட்டி, சிறிய கீற்றுகளை நறுக்கிக்கொள்ளவும்.
பின் ஒரு கிளாஸ் தண்ணீரில் நறுக்கிய வெண்டைக்காயை இரவு முழுவதும் ஊறவைக்கவும்.
அடுத்து இந்த தண்ணீரை வடிகட்டி, மறுநாள் காலையில் வெறும் வயிற்றில் குடிக்கவும்.
இது நார்ச்சத்து அதிகமுள்ள பானம் என்பதால் செரிமானத்தை மெதுவாக்கி, ரத்த சர்க்கரையை கட்டுப்படுத்தி குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.
மேலும், இந்த பானம் நம் உடலில் மெட்டபாலிசத்தை தூண்டுகிறது.

# நான்தான்!... மதவடி மயிலன்!...

நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்... வணக்கம்!...வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக் கிறன்.. இனி கோடைகாலத்தில் பலபேர்தாய் நாட்டுக்குப் போக ஆயத்தங்கள் செய்துகொண்டிருப்பியள்,சிலர் போய்க்கொண்டுதான் இருப்பியள் என எண்ணுகின்றான் இந்த மயிலன் அங்கு போன பலர் கண்ட தெல்லாததையும்திண்டு கொழுத்து நிறைகூடியும்விடுவீர் கள் முன்கூட்டியே அவதானம் செலுத்துங்கோ. சொல்வழிகேட்கா விட்டால் பிறசர், சீனிவருத்தம் கொலஸ்ரோல் என டாக்குத்தர் மாரிடம் மாறி..மாறிச் செல்ல வேண்டியதுதானே...

ஊருக்குச் சென்று அங்கு பந்தா காட்டி, தண்ணியடித்து கூழும் கும்மாளமும் அடிப்பவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சாமத்தியச் சடங்கு கலியாணம் என தமது சாதி, சமயம் பார்த்துச் செய்து வைத்தவர்கள்,10.20.30, 40, 50, 60, 70, 80 எனப்பிறந்தநாள் கொண்டாடுபவர்கள் பல ரகத்தினர் செய்யும் அட்டகாசங்களோ கண் கொண்டு பார்க்க முடியாது. அந்தளவுக்குக் கொண்டாட்டங்கள் களைகட்டும் என எதிர்பார்க்க வேண்டியதுதான்...

நம்மட நாட்டில பொருளாதாரப் பிரச்சனையால் பெரும் நெருக்கடி. இதனால் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு எப்ப ஓடலாம் என்று பல்லாயிரக் கணக்கானோர் படாத பாடுபடுகுதுகள் பாருங்கோ.. வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல் வெளிநாடுகளில் இருந்து வரும் பணங்களை நல்லாய் அனுபவிக்கும் கூட்டத்தினர் மிக அதிகம் பேர்.



அது அப்படி இருக்கையில் கடும் வெப்பம் ஏற்பட்டு நாடு முழுவதும் ஒரே அல்லோம்தான் வறுமையால் பெருந்தொகையான நமது உறவுகள் பெரும் துயரப் படுகிறார்கள் என்பது உண்மையாகும். அரசாங்கமும் பல தொண்டு நிறு வனங்களும் நல்ல பணிகளைச் செய்கிறார்கள். இவர்களை வாழ்த்த வேணும் பாருங்கோ.

இதில் என்ன செய்தி என்றால் நிவாரணத்தைக் காட்டி நம்மட ஆட்கள் பல மோசடிகளிலும் ஈடுபடுவது வெட்கக் கேடான விடயமாகும். ஏழைமக்களுக்குக் கொடுக்கும் நிவாரண உதவிகளிலும் மோசடி செய்கிறார்கள் என தகவல் இருக்குது பாருங்கோ.

அடுத்தது எழுபது வருடங்களுக்கு மேற்பட்ட கள்ளரையும் கொள்ளைக்காரரையும் லஞ்சக்காரரையும் பிடித்து மறியலில் அடைப்பதே புதிய அரசாங்கத்தின் வேலையாகிவிட்டது பாருங்கோ.. அந்தளவுக்கு நாடு சீரழிந்து கிடக்கிறது. வந்து ஆறு, ஏழு மாதம்கூட ஆகவில்லை எல்லாத்தையும் தா என்பவர்களும் அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை என்பதும் கேள்வி கேட்பதும் சுலபமாகிவிட்டது. ஆனால் இந்தக் கள்ளரைப் பிடித்து அடைப்பது எவ்வளவு கடினம்பாருங்கோ..

சரி..சரி..இனி விசயத்துக்கு வாறன்...ஊருக்குப் போய் வந்த என்ர நண்பன் கன விசயங்களையும் நேரடியாகக் கண்டு, பேசி அனுபவித்து வேதனையுடன் வந்து எனக்கு ஒவ்வொன்றாகச் சொன்னான் எனக்குச் சிரிப்பதா?..அழுவதா?..என்று தெரியவில்லை. இந்தக் கேடுகெட்ட மூத்த தமிழ்க் குடிகள் செய்யும் அலப்பறைகளோ கொஞ்சமில்லை. அவற்றை நீங்களும் கொஞ்சம் அறியுங்கோ. நீங்களும் அந்தத் தவறுகளைச் செய்யாவிட்டால் இந்த மயிலன் உங்களைக் கும்பிடுவான்..

வெளிநாட்டிலிருந்து கனகாலத்துக்குப்பிறகு ஊருக்குப் போனவன் தனது புதிய வீட்டைக் காணவில்லை எனத் தேடினான்..அதெ ன்ன வீட்டைக் காணேல..சினிமாப்படம் ஒன்றில் வடிவேலு காணாமல் போன தனது கிணற்றின் கதையைவிட இது படு மோசம் கண்டியளோ.. அதாவது வெளிநாட்டில் இரவு -பகல், பனி-குளிர் இரண்டு-மூன்று வேலைகள் செய்து அடியான் அடித்துப் பணத்தை தனது உடன்பிறந்த தம்பிக்கு அனுப்பி தனக்கு ஒரு வீடு கட்டச்சொல்லியிருந்தான். ஆனால் என்ன நடந்தது. தம்பி தன்ர காணியில தன் பெயரில் வீடு கட்டிக் குடிபுகிர்தலையும் செய்துவிட்டான். அண்ணன் போய் தன் வீட்டைத் தேடினால் வீடு இல்லை. வெறுங்காணி அப்படியே கிடந்ததாம். தங்கத் தம்பி செய்த துரோகத்தைப் பாருங்கோவன்.

அடுத்தது இரு சகோதரிகள் இணைபிரியாத அன்புச் சகோதரிகளின் கதைதான். ஒரு சகோதரி ஊரில் மற்றவர் வெளிநாட்டில். வெளிநாடு வந்தவாவும் கணவரும் பிள்ளைகளும் யாழ் ரவுணில் கோடி பணத்தில் ஒரு காணி வேண்டும்படி காசு அனுப்பியிருக்கிறார்கள். அந்த உடன்பிறந்த சகோதரி என்ன செய்தவா எனப் பாருங்கோ. சகோதரி வெளிநாட்டிலிருந்து அக்கா அனுப்பிய பணத்தில் காணி வேண்டி தனது பெயரில் 2 பரப்பு வெளிநாட்டுச் சகோதரியின் பெயரில் ஒரு பரப்பு என எழுதி தன்ர காணியில் ஒரு வீடும் கட்டிவிட்டாள். அக்கா வெளிநாட்டிலிருந்து ஊருக்குப் போய் எங்க காணி என கேட்டபோது ஏகப்பட்ட சுத்து மாத்துச் செய்து சகோதரியின் காசை எப்படிச் செலவுசெய்ததெனக் கணக்குக் காட்ட, இருவருக்குமிடையில் போர் மூண்டு அடி - தடி எனத்தொடங்கி பொலிஸ்வரை சென்று கோட்டுக்குப் போட்டுதாம்.

கூடப்பிறந்த தங்கை செய்த சுத்துமாத்தை யோசித்துப் பாருங்கோ. அப்ப எங்கட எதிரி எங்கட வீட்டுக்குள்தான் இருக்கினம் பாருங்கோ. அப்ப உங்கள் ஒவ்வொருவருக்கும் உங்கட வீட்டில்தான் எதிரிகளும் கொள்ளைக்காரரும் கூட்டுக் களவாணிகளும் இருக்கிறார்கள் என்பதை இந்த மயிலன் ஆணித்தரமாகச் சொல்லுவான்.

அடுத்தது வெளிநாட்டிலிருந்து தமது பிள்ளைக்குச் சாமத்தியவீடு செய்ய என்று நாட்டுக்குப் போய் பெரிய எடுப்பில் செய்த கதைதான் இது. ஊரெல்லாம் தங்கட சாமத்தியவீட்டை எல்லாரும் கதைக்க வேண்டும் என்றும் பெயரும் புகழும் கிடைக்க வேண்டும் என கணவனும் மனைவியும் எடுக்காத எடுப்பெல்லாம் எடுத்துத் திருவிழா செய்திருக்கிறார்கள். அதாவது சாமத்திய வீட்டுக்குக்

கொழும்பிலிருந்து யானை, ஆடம்பரக்கார், கேரளாவிலிருந்து பாட்டுக்காரர், ஆட்டக்காரர், மேளக்காரர், ஆடம்பர விலை உயர்ந்த ஆடை ஆபரணங்கள் அது, இது என இறக்குமதி செய்து ஆடம்பர மண்டபம் எடும்துச் செய்து ஆயிரம்பேருக்குச் சொல்லிச் செய்து இரண்டு கோடிக்கு மேல் செலவாம்.

கொண்டாட்டம் முடிய கணவனும் மனைவியும் குத்துவிளக்கில கணக்குப்பார்த்தால் ஒரு கோடி ரூபா துண்டாம். என்ன செய்வதென முழிபிதுங்கி நிலைதடுமாறி தமது சொந்தக் காணியை ஒரு கோடிக்கு வித்துவிட்டுக் கணக்கை முடித்துப் புலம்பெயர் நாட்டுக்குக் கண்ணீருடன் திரும்பினார்களாம். பாவம் அந்தப் பிள்ளை. ஆடம்பரத்தில் மூழ்கி வரவு-செலவு பற்றி கொஞ்சமும் யோசிக்காமல் எடுப்பெடுப்பவர்களுக்கு இதுவும் வேணும்!..இன்னமும் வேணும!.. என்றுதான் இந்த மயிலன் சொல்லுவான்.

அடுத்தது வெளிநாட்டிலிருந்து தனது மகனுக்கு கலியாணம் செய்யப் போனவையின்ர கதைதான். அதாவது தன்ர மகனுக்கு ஊரில, தன்ர சாதிக்க, தன்ர சமயத்தில நல்ல வடிவான வெள்ளைப் பெட்டையை செய்யவேண்டும் எனப் புறோக்கருக்கும் எக்கச்சக்கமான பணத்தை இறைத்து ஒரு வெள்ளை நிறப் பெட்டையைப் பேசிமுடித்து ஊரில் ஆடம்பரமாகத் திருமணம் முடிந்ததாம். விசயம் என்ன வென்றால் ஒரு கொடியில் புதுமாப்பிள்ளை கட்டிய தாலி, நகைகள், புது உடுப்புகள் எல்லாத்தையும் வழித்தெடுத்துச் சுருட்டிக்கொண்டு தான் காதலித்த பெடியனோடு அன்று இரவே ஓடித் தப்பிவிட்டதாம். பெட்டை சரியான கெட்டிக்காரிபோல. அடுத்தநாள் பொலிசில போய் முறைப்பாடு செய்து பதிவுத் திருமணத்தையும் செய்து பெட்டை தன் காதலனுடன் கொழும்புக்குக் கனிமூன் சென்று விட்டதாம். வெளிநாட்டு மாப்பிளையும் பெற்றோரும் உறுவுக்காரரும் எல்லா இடங்களும் தேடியும் எள்ளளவேனும் பிரயோசனம் இல்லாமல் போய் விட்டதாம். ஏமாந்த கோணகிரியாய் வெளிநாட்டுக் குடும்பம். இது தேவையா?..

பிள்ளைகள் விரும்பாமல் பெற்றோர் தமது விரும்பம், பணம், சாதி, சமயம், குலம், கோத்திரம் பார்த்துக் கலியாணம் செய்வதால் தாமும் கெட்டு தமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் பாழடிக்கிறார்கள் என்பதை எள்ளளவேனும் சிந்திக் கிறார்கள் இல்லை. என்பது இந்த மயிலனுக்குச் சரியான கோபம் கண்டியளோ...

வெளிநாடுகளிலிருந்து செல்பவர்கள் பலருக்கு இப்படியான நிறைய சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்குது பாருங்கோ. தாய் நாட்டில் வாழ்பவர்கள் பலர் இன்று காசுக்காக எதையும் செய்வார்கள். பணம் என்று வந்துவிட்டால் அண்ணன் என்னடா?..தம்பி என்னடா? உறவென்னடா?..குடும்பம் என்னடா?.. காசேதான் கடவுளப்பா. உறவும் இல்லை?..இரத்த பாசங்களும் இல்லை?..கூடிப்பிறந்த சகோதரங்களும் இல்லை.. தாய் தந்தையும் இல்லை?.. முடிவில் நமது உடல் ”காயமே பொய்யடா!..காற்றடைத்த பையடா” இதுதான் உலகம். அப்ப போட்டுவாறன். எல்லாரும் நல்லபடி இருங்கோ.. அடுத்தமுறை வெறுபல விசயத்தோட இந்த மயிலன் வருவான்!..

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| பு | த் | த | ர் |
| ப் | க | ல் | ப |
| கா | ல் | பா | ம் |
| க | வி | தி | க |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நீ | தி | த் | து | றை | க | வை |
| ர் | ப | ம் | க | து | ம் | பி |
| வீ | ணை | ண் | ப | ன் | சி | ப் |
| ழ் | ர் | ம் | க | ச | ங் | கோ |
| ச் | னா | த | ண் | கே | க | வ |
| சி | ன் | மு | ணா | ங் | ம் | ல |
| ரி | ம | கு | டி | கா | ர | ன் |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 8 | 6 | 5 | 2 | 9 | 7 |
| 9 | 5 | 6 | 2 | 3 | 7 | 4 | 8 | 1 |
| 2 | 8 | 7 | 4 | 9 | 1 | 5 | 3 | 6 |
| 8 | 6 | 2 | 9 | 7 | 3 | 1 | 5 | 4 |
| 3 | 4 | 1 | 5 | 8 | 6 | 9 | 7 | 2 |
| 7 | 9 | 5 | 1 | 4 | 2 | 3 | 6 | 8 |
| 1 | 3 | 8 | 6 | 5 | 4 | 7 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 7 | 1 | 8 | 6 | 4 | 3 |
| 6 | 7 | 4 | 3 | 2 | 9 | 8 | 1 | 5 |




# மூத்த எழுத்தாளர் மறைந்தார்

## (சில்லாலை) சில்லையூர் சிங்கராசா – யேர்மனி
## பன்முக ஆளுமைப்படைத்த பெருமகன்!..

யேர்மனியில் சுமார் 40 ஆண்டுகள் வாழ்ந்தவரும் இலங்கை வடபுலம் சில்லாலையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் திருமதி மலர் அவர்களின் அன்புக் கணவனுமாகிய சில்லையூர் சிங்கராசா அவர்கள் சென்ற 27.07.2025 திகதியன்று தனது 83வது வயதில் இயற்கை எய்தினார் என்பதை மிகுந்த துயருடன் அறியத் தருகின்றோம்.

அவர் வசித்த யேர்மனி நகரமான Olfen நகரில் (05.08.2025) தேவாலய பிரார்த்தனையுடன் இறுதிச் சடங்குகள் இடம் பெற்று அன்னாரின் பூவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அமரர் சிங்கராசா அவர்கள் யேர்மனிய கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் தொடங்கிய காலம் தொட்டு சுமார் நாற்பது வருடங்களாக அதனுடன் இணைந்து ஆன்மீகப் பணிகளை மேற்கொண்டு வந்திருக்கிறார்.

இவர் எழுதாத பங்கங்கள் இல்லை என்றே கூறலாம். கல்வி, கலை, இலக்கியம், அரசியல், சமூகம், ஆன்மீகம் , அரசியல், கவிதை, கட்டுரை, சிறுகதை, இயல், இசை, நாடகம் என பன்முக ஆளுமை படைத்த ஒரு பேனாப் போராளியாகவே திகழ்ந்தார்.

கடந்த இருபது வருடங்களின் முன் யேர்மனியில் முதன் முதல் தோற்றம் பெற்று தற்போதும் இயங்கிவரும் யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் நிர்வாக சபை உறுப்பினராகவும் பல ஆண்டுகள் திறம்பட கடமையாற்றி பல எழுத்தாளர்களின் நன்மதிப்பையும் பெற்றிருக்கிறார். புலம்பெயர் பன்னாட்டு தமிழ் எழுத்தாளர் சங்கம் உட்படப் பல பொது மன்றங்கள் சங்கங்களோடு இணைந்து நீண்டகாலம் பொதுப்பணிகளையும் செய்துவந்த பெருமகனை நாம் இழந்திருப்பது வேதனைதரும் விடயமாகும்.

இவரின் சிம்மக் குரலைக்கேட்டு அதிராத அரங்குகளே இல்லை என்றே கூறலாம். வசீகரக் குரலோடு சபையோரைக் கட்டிப்போடும் திறமை மிக்கவர். பழகுவதற்கு இனிமையான மனிதர். பண்பாடு காத்து அனைவரையும் அரவணைத்து சென்ற மனிதநேயம்மிக்க ஆளுமையை இழந்திருப்பது தமிழுலகத்துக்குப் பெரிய இழப்பாகவே கருதலாம்.

கடந்த 36 வருடங்களாக யேர்மனியில் வெளிவந்துகொண்டிருக்கும் மண் கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையின் ஆரம்பகால எழுத்தாளராக பல்வேறுபட்ட படைப்புகளைப் படைத்து வாசகர்களின் பெருமதிப்பைப் பெற்றிருக்கிறார். மிக நீண்ட காலம் இவரின் படைப்புகள் எமது சஞ்சிகையில் வெளிவந்தன என்பதையும் இங்கு குறிப்பிட்டுக் கூறுவது சிறப்பான விடயமாகும்..

இவர் சென்ற பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இவர் எழுதிய ஒரு கவிதை இதில் பிரசுரிந்து அவருக்கு மரியாதை செலுத்துகின்றோம். அவரின் அழகான, தெளிவான எழுத்தைப் போல்தான் அவரின் உள்ளம், அவரின் அழகான திருமுகத்தையும் இன்று இழந்து தவிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும் யேர்மனி தமிழ்க் கத்தோலிக்கப் பணியகம், யேர்மனி மண் சஞ்சிகையினர் உட்படப் பல அமைப்புகளோடு அவர் அன்புத் துணைவி திருமதி மலர் சிங்கராசா அவர்கள் மற்றும் குடும்பத்தவர்களுக்கு நமது ஆறுதலைத் தெரிவிக்கின்றோம்.


அன்புள்ளத்தோடு அனைவரையும் நேசித்த மனிதநேயம் மிக்க மகான் இறைபதம் அடைய எல்லாம் வல்ல ஆண்டவரை வேண்டுகின்றோம்!...

ஓம் சாந்தி!...ஓம் சாந்தி!...

## இறைவனைத் தேடுகிறோம்!

உருண்டு உயர்ந்து
புரண்டு துவண்டு
நுரை கக்கி கரை தக்கி - மீண்டும்
அலை பாயும் அலைகளெல்லாம்
நீங்கள் அலைந்து தேடுவது யாரை?
அலைகள் சொன்னது கடலைத் தேடுகின்றோம்.
உறுப்பெல்லாம் நெருப்பாக
இருளுக்குப் பகல் தந்து
சுற்றி சுற்றி வரும் சூரியனே!
நீ சுற்றிச் சுழன்று தேடுவது யாரை?
சூரியன் சொன்னது
விண்ணைத் தேடுகிறேன்.
காற்றோடு ஒளியோடு
காதலிக்கச் சிரித்துச் சிரிக்க
கிளைகளை மேலெழுப்பி
நீண்டு நீண்டு ஓடும் வேர்களே
நீங்கள் ஓடித் தேடுவது யாரை?
வேர்கள் சொன்னது மண்ணைத் தேடுகிறோம்.
வானில் வட்டமிட்டு ஆடும்
கடதாசிப் பறவை காற்றாடியே
நீ ஆடித் தேடுவது யாரை?
காற்றாடி சொன்னது
காற்றைத் தேடுகிறேன்
ஆதாம் முதல் அடியேன் வரை
மாநுடம் தேடுவது
யாரை? யாரை? யாரை?
மாநுடம் சொன்னது
இத்தனையும் படைத்த
ஆதியந்தமில்லா அநாதி
இறைவனைத் தேடுகிறோம்!

திலகவதூர் தங்கராஜா.




# மில்க்வைட் கனகராசாவின் நினைவுநாள் 22.07.1998

## தொழிலதிபர், கல்வியாளர், சமூகமுன்னோடி..
## தமிழர்களால் கொண்டாடப்படும் மாமனிதர்..

(Milk White ) மில்க் வைட் என்றால் தமிழ் மக்களுக்கு நினைவில் வருவது நீலக்கட்டிச் சவர்க்காரம்தான். அதாவது 1998ம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்களுக்கு இச்சவர்காரத்தைத் தெரிந்திருக்க வாய்ப்புகள் குறைவே. முன்னர் பிறந்து வாழ்ந்தவர்கள் இந்த நிலக்கட்டிச் சவர்காரத்துடன் நிட்சயம் தொடர்புபட்டுத்தான் வாழ்ந்திருப்பார்கள்.

அன்றைய காலத்தில் ஒரு நீலக்கட்டி வேண்டி முழுக்குடும்பமே பாவித்திருக்கிறார்கள். குளிப்பதற்கும், ஆடை கழுவுவதற்கும், அன்றாட சில பாவனைக்கும் இந்தச் சவர்காரம்தான் பெரும் வரப்பிரசாதமாக விளங்கியிருக்கின்றது.

இந்தச் சவர்காரத்தை ஒரு குடிசைக் கைத்தொழிலாக மேற்கொண்டு அந்தக் காலத்தில் வீடு..வீடாகக் கடகத்தில் சுமந்துசென்று விற்பனை செய்தவர்தான் யாழ் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த அமரர் முருகேசு கந்தையாபிள்ளை - மீனாட்சிஅம்மா தம்பதிகள் இவர்களுக்கு 1927-11-2ம் திகதி பிறந்தவர்தான் கனகராசா என்னும் மாமனிதர்.

இவர் இந்த சவர்க்கார வர்த்தகம் மூலமாக மாபெரும் சாதனைகளைப் புரிந்து மறைந்தாலும் (22.07.1998) அவரின் புகழ் இன்றும் என்றும் பேசப்படும் மாமனிதராகப் போற்றப்படுகின்றார். இவரின் 27வது ஆண்டு (22.07.2025) நினைவுநாளாகும்.தந்தைக்குப்பின்பு 1952ம் ஆண்டில் அதாவது தனது 25வது வயதில் ஆசிரியர் தொழிலில் பதவிவகித்த இவர் அதை விட்டு விலகி இந்தச் சவர்க்கார உற்பத்தியில் தானும் ஈடுபட்டார்.

அந்தக்காலத்தில் இந்த நீலக்கட்டிச் சவர்க்காரம் குறைந்த செலவில் நிறைந்த பலனைக் கொடுத்தது. சாதாரண பாமர மக்களுக்குப் பெரிதும் உதவியது. படிப்படியாக விரிவடைந்த இத்தொழில் வடபகுதி மட்டுமல்ல கிழக்கு மாகாணம் மற்றும் நாடுமுழுவதும் பிரபலமாகியது. பெரும்வளர்ச்சிகண்ட இந்தச்சவர்கார உற்பத்திகள் பல..பல..

”மில்க்வைட் நீலக்கட்டிச்சோப்” ”நியூ மில்க்வைட் சோப்” ”மெடிக்கேட்டட் சோப்” ”மில்க் வைட் பார்சோப்” நீம் வாசனைச்சோப், மில்க் வைட் சலவைப்பவுடர் என்பவற்றுடன் நீம் சுகாதாரத்தூள், ஒலிவ் ஸ்ஞானப்பவுடர், நீமியா உரப்பசளை, நீமரொக்ஸ் கிருமிநாசினி, சைபால் சுத்திகரிப்பு மருந்து போன்ற பல உற்பத்திகளையும் அறிமுகப்படுத்தி நாட்டின் பெரிய தொழிலதிபராகவும் உயர்ந்தார். இதனால் இச்சவர்காரம் நாடு முழுவதும் விற்பனைகண்டது. பொருளாதாரத்தில் உயர்ந்த இவர் தான் வாழ்ந்தால் போதும் என்று நினைக்காது ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் நலனிலும் பெரும் பங்காற்றியிருக்கிறார்.

**கல்விப்பணி:-**

மில்க்வைட் என்னும் செய்திப் பத்திரிகை, சித்தமருத்துவம், சிறுவர் பகுதி, வரலாறு, உடல்நலம், மாதர்பகுதி, திருக்குறள் அருள் மொழிகள், பொது அறிவு, பனைவளம் போன்ற பல வெளியீடுகளை வெளியிட்டு தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றினார்.

1977ம் ஆண்டு பொன்விழாக்கண்ட மில்க்வைட் நிறுவனம் மேலும் பல வெளியீடுகளைச் செய்தது. 1-பல்லும் சொல்லும், 2-யோகக்கலை, 3-வேம்பு 4-சஞ்சலம் தீர்க்கும் சணல் 5-முதியோர் போற்றிய முருங்கை 6-துளசியின் மகத்துவம் 7- மழைப்பதிகம் 8-நவீனமுறையில் பனை வெல்லம் 9-நாவலரின் நித்திய கருமவிதி 10-படிப்பனை 11-யோகசித்தி 12-நாவலர் நீதிநூல் போன்ற நூல்களையும் தமிழ் - ஆங்கில மொழிகளில் பதிப்பித்து பாடசாலை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இலவசமாக விநியோகித்து ஒரு கல்வி ஆசானாகவும் திகழ்ந்தார்.

### பொதுப்பணிகள்:-

சிறுவர் இல்லங்களில் வாழ்ந்துவரும் சிறார்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் உணவு, உடை, சுகாதார உதவிகளுக்காக பெரும் நிதிப்பங்களிப்பையும் தொடர்ச்சியாகச் செய்து வந்திருக்கிறார். நூல்நிலையங்கள் மற்றும் சமூக தாபனங்களுக்குத் தனது வெளியீடுகளை இலவசமாக வெளியீடு செய்து கிராமங்கள் தோறும் பெரும் பணியாற்றினார்.

நாட்டின் தமிழர் வாழும் பிரதேசங்கள் எங்கும் பனைவிதைகள், வேம்பு, இலுப்பை, முருங்கை, மரவள்ளி, பப்பாசி, துளசி போன்றவற்றையும் எடுத்துச் சென்று நாட்டச் செய்தார். மண்வெட்டி, பிக்கான், கடகம், தாச்சி போன்ற உபகரணங்களையும் மக்களுக்கு இலவசமாக வழங்கி பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட மாமனிதர்தான் இவர். இவரின் முயற்சியால் நடப்பட்ட பல மரங்கள் தமிழர் பிரதேசங்களில் இன்று பெரு விருட்சங்களாகக் காணப்படுவது மகிழ்ச்சியான விடயமாகும்.

இவரின் பல்வேறுபட்ட முயற்சிகள், சமூகப்பணிகளுக்காக பல நிறுவனங்களால் 27 பட்டங்கள் வழங்கப்பட்டன. இலங்கை அரசும் சமாதான நீதிவான் பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருக்கிறது.அமெரிக்கா புளோரிடா மாநில பல்கலைக் கழகம் சிறப்புக் கலாநிதிப்பட்டமும் ஐக்கியநாடுகள் சுகா தார நிறுவனத்தின் பேரகராதியிலும் இவரது பெயர் இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளை நன்று அறிந்திருந்த இவர் இன, மத, மொழி, பிரதேச எல்லைகளைக் கடந்து சகல மக்களுக்கும் சேவை செய்திருக்கின்றார். தான் ஈட்டிய செல்வம் அனைத்தையும் தான் வாழ்ந்த சமூகத்துக்காகவே பயன்படுத்தி ஒரு மாமனிதராக, ஒரு முன்னோடியாகவே வாழ்ந்து அர்ப்பணித்திருக்கிறார்.

1998 யூலை மாதம் 22ம் திகதி மறைந்த இந்தச் சமூகத் தொண்டன் யாழ் மண்ணில் வாழ்ந்தார் என்பது நமக்கெல்லாம் பெருமையே. இப்படி ஒரு மனிதரை இனிமேல் காண்பது என்பதும் மிகக் கடினமே...இந்த மாமனி தனை இன்றைய சமூதாயம் அறிய வேண்டியது அவசியமானதாகும்!..இந்த மாமேதையைப் போல நாமும் வாழ முயற்சிப்போமாக!...

---

## வாழ்க்கையில் வெற்றிபெறச் சில வழிகள்...

1- பிறரைக்காட்டிலும் அதிகமாக அறிந்து கொள்ள முயலுங்கள்.

2- பிறரைக்காட்டிலும் அதிகமாக உழைக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

3- பிறரைக்காட்டிலும் குறைவாகப் பிறரிடமிருந்து பெற முயலுங்கள்.

# மனதுக்கு இன்பம் தருவது சுற்றுலா!...

(பயணக்கட்டுரை) திருமதி கலைவாணி ஏகானந்தராசா

சென்ற இதழ் தொடர்ச்சி........





மூன்று சகோதரிகள் (Three Sister) என்கிறகுன்றுகளிற்கு ஒரு கதை இருப்பதாக சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தேன்.ஆஸ்திரேலியாவின் அபோரிஜீனல்ஸ் (Aboriginals) பழங்குடி மக்களிடையே இரண்டு இனத்தவர்கள் உள்ளனர். அவர்களில் கட்ரூம்பா இனத்தில் உள்ள மூன்று அழகான பெண்களை " நெப்பியன் இனத்திலுள்ள மூவர் காதலித்தனராம். அப்போது தடைசெய்யப்பட்ட "இனத்தை சேர்ந்தவர்கள் இந்த மூன்று பெண்களையும் பலாத்காரமாக கவர்ந்துசெல்ல திட்டமிட்டனராம்அதனை அறிந்து அந்த மூன்று பெண்களான மேகினி, குணாடு, ஜஸ்மி மூவரையும் அவர்களது தந்தை ஒரு சூனியக்கிழவன் மூலம் குன்றுகளாக மாற்றிவிட்டானாம்.

அதன்பின் பழங்குடியினருக்குள் சண்டை மூண்டது. அதில் சூனியக் கிழவன் இறந்து விடவே அந்த மூன்று பெண்களும் விமோசனம் இன்றி குண்றுகளாக காட்சியளிக்கின்றனர் என்பது கதையாகும். ஆனால் பல நூறாயிரம் ஆண்டுகளாக சுண்ணாம்புக் கற்களில் அரிப்பு ஏற்பட்டு உருவான இந்த குன்றுகளுக்கு இப்படி கதைகளைப் புனைந்துள்ளனர் என்பதே உண்மையாகும்.

கட்ரூம்பா(Katoomba) பயணத்தில் அடுத்து (Scenic Wold) சீனிக் உலகம். (Skyway) வயர்களில் ஓடும் ரயில் பெட்டிகளில் ஒரு மலையிலிருந்து வேறு மலைக்கு கீழிருந்து 880 அடி உயரத்தில் ஒரே உயரத்தில் பயணித்தோம். உள்ளே இருந்தபடி கீழ் தளத்தில் இருக்கும் கண்ணாடியில் 750 அடி நீர் வீழ்ச்சிகளை பள்ளத்தாக்குகளைப் பார்த்து பிரமித்தபடி பயணித்தோம். மிகவும் குதூகலமாக இருந்தது. அடுத்து உலகிலேயே அதி கூடிய பள்ளத்தாக்கை நோக்கி (206 மீற்றர் ) செங்குத்தாக பயணிக்கும்( Scenic Railway) சினிக் ரயிலில் பயணித்தோம். பயம் கலந்த இன்ப அதிர்ச்சியை தந்தது..





சிறியவர் முதல் பெரியவர்கள் வரை பயத்தில் சத்தமிட்டனர். மிகவும் ரசித்தோம். அடுத்து (Kabel way) வயர்களில் மேல் நோக்கி 54 அடி உயர பயணிக்கும் ரயிலில் காடுகள் மலைகள் பள்ளத்தாக்குகள் நீர்வீழ்ச்சிகள் என வர்ணிக்க முடியாத அழகை கண்டுகழித்தோம். 11 ஆயிரத்து 400 கிலோ மீற்றர் சுற்றளவில் கரி அகழ்வு நடைபெற்ற இடங்களையும் கரிக்குகைகளையும் பழங்குடியினர் பாவனையிலிருந்த ஆயுதங்களையும் அங்கு காணக்கூடியதாக இருந்தது.

ஒருமுழுநாள் மிகமகிழ்ச்சியாக கழிந்தது.அடுத்து (Sidney Tower Eye) சிட்னி கோபுரம். புதிய தெற்கு வேல்ஸ் பகுதியில் அமைந்துள்ள இந்த 309 மீற்றர் உயரக் கோபுரத்திற்கு சென்றோம். இந்தக்கோபுரத்தை 1970 ஆம் ஆண்டு வடிவமைக்க ஆரம்பித்து 1981 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இதில் 19 தளங்கள் இருப்பதாக அறிந்தேன். நாம் 17ஆவது தளத்திலுள்ள உணவகத்தில் பதிவு செய்துவிட்டு சென்றோம். கோபுரத்தின் தளம் மிக மெலிதாக சுற்றிக்கொண்டிருந்தது. வேளியே இயற்கை வளங்களை பார்த்து ரசிக்கக்கூடியவகையில் கண்ணாடியால் சுற்றி அடைக்கப்பட்டிருந்தது.

இரண்டு மணிநேரம் மட்டும் தரப்படும். 30 க்கும் மேற்பட்ட பல நாட்டு உணவுவகைகள் வைக்கப்பட்டிருந்தன. வேண்டிய உணவை எத்தனை தடவையிலும் எடுத்து உண்ணலாம். வேண்டிய குளிர்பாணங்களையும் அருந்தலாம். அற்புதமான ஆடம்பர விருந்துக்கு சென்றது போல வயி-றார உண்டு மகிழ்ந்தோம். ஒருவருக்கு 125 டொலர் அறவிடுவார்கள். மிக உயரத்திலிருந்து பார்க்கும்போது நாம் சென்ற இடங்களையெல்லாம் தூரத்தே கண்டோம் .

சிட்னி முழுவதும் தெரிந்தது. கப்பலில் கடல் பயணம் செய்து பார்த்த இடங்களையெல்லாம் பார்க்கும் போது மிக வியப்பாக இருந்தது. துறைமுகம் ஒப்ரா கட்டிடம் சிட்னி பாலம் உட்பட பல அழகான இயற்கை காட்சிகளை பார்த்து மகிழ்ந்தோம்.அடுத்த நாள் ஆஸ்திரேலியாவின் தலை நகரமான கன்பரா(Canberra) சென்றோம்

**அடுத்த இதழில் தொடரும்.........**




# ஐக்கிய நாடுகள் சபை...

**- ஜெயா நடேசன் -**

ஐக்கிய நாடுகள் சபை என்பது உலக அமைதி மற்றும் பாதுகாப்பை பேணும் உலக அமைப்பாகும்..

நாடுகளுக்கு இடையே நட்புறவு உறவுகளை வளர்த்தல்,பன்னாட்டு ஒத்துழைப்பைப் பேணல்,நாடுகளின் நடவடிக்கைகளை ஒத்திசைப்பதற்கான மையமாக இருத்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட அரசுகளுக்கிடையான ஓர் அமைப்பாகும்.இது உலகின் பன்னாட்டு மிகப் பெரிய அமைப்பாகும்.இதன் தலைமையகம் அமெரிக்காவில் நியூயோர்க்கில் அமைந்துள்ளது.

இதன் முக்கிய அலுவலகங்கள் ஜெனீவா,நைரோபி,வியன்னா,டென்ஹாக் நகரங்களில் உள்ளன.இந்த அமைப்பு அதன் உறுப்பு நாடுகளில் இருந்து மதிப்பிடப்பட்ட மற்றும் தன்னார்வப் பங்குகளால் நிதி அளிக்கப்படுகின்றது.இரண்டாம் உலகப் போருக்கு பின் நிறுவப்பட்டது.1945 ஏப்ரல் 25 ல் 50 அரசுகள் அமெரிக்காவின் சான் பிரான்ஸ்கோவில் ஒரு மகாநாட்டிற்காக சந்தித்து ஐ.நாடுகளின் பட்டயத்தை உருவாக்கத் தொடங்கின.

இது 1945.06.25 அன்று ஏற்றுக்கொள்ளப் பட்டு 1945.10.24ல் நடைமுறைக்கு வந்தது.2011ல் தெற்கு சூடான் சேர்க்கையுடன் 193 உறுப்பினர்களாக இயங்குகிறது. இறையாண்மை நாடுகளையும் பிரதிநிதிப்படுத்துகிறது.முதலில் ஐ.நாடுகள் பொதுச்சபை தலைவர் 04.06.2019 அன்று நையீரியாவின் திச்சானி முகமது பாண்டே 74வது அமர்வின் தலைவராக பதவி ஏற்றார்.

தற்போதைய பொதுச் செயலாளராக போர்த்துக கீசிய அரசியல்வாதியும் தூதருமான அந்தோனியோ குத்தேரசு பதவியில் உள்ளார்.1945 நிறுவப்பட்டது.தற்போது 193 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்.அக்டோபர் 24ம் நாள் ஐ.நாடுகளின் நிறுவனம் நிறுவப்பட்டு ஐ.நாடுகள் சபை தினம் 24.10.2024 கொண்டாடப்படுகிறது.

# கடன் முறையிலிருந்து வெளியே வருவது எப்படி ?




ஜெர்மனியில் உள்ள சூவா (SCHUFA) என்பது ஒரு கடன் மதிப்பீடு அமைப்பு. உங்கள் கேள்விக்கான பதில் இங்கே விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

## சூவா (SCHUFA) கடன் முறை என்றால் என்ன?

சூவா என்பது ஜெர்மனியில் உள்ள ஒரு நிறுவனமாகும், இது தனிநபர்களின் கடன் குறித்த தகவல்களைச் சேகரித்து மதிப்பீடு செய்கிறது. இந்த மதிப்பீடு, நீங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் உள்ளவரா என்பதை ஒரு ஸ்கோர் (Score) மூலம் குறிக்கிறது.

நீங்கள் வங்கியில் கடன் வாங்கும்போதும், செல்போன் ஒப்பந்தம் செய்யும்போதும், அல்லது வீட்டு வாடகை ஒப்பந்தம் செய்யும்போதும், அந்த நிறுவனங்கள் உங்கள் சூவா ஸ்கோரைச் சரிபார்ப்பார்கள்.

இந்த ஸ்கோர், உங்கள் நிதி நிலைமையையும், எதிர்காலத்தில் நீங்கள் பணம் செலுத்தும் வாய்ப்புகளையும் குறிக்கிறது.

நீங்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதிலோ, அல்லது பில்களைக் கட்டுவதிலோ தாமதம் ஏற்பட்டால், அது சூவா பதிவில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்.

## பணம் செலுத்திய பிறகு சூவா பதிவிலிருந்து எப்படி வெளியே வரலாம்?

நீங்கள் கடன் தொகையை முழுமையாகச் செலுத்தியவுடன், நீங்கள் உடனடியாக சூவா பதிவிலிருந்து வெளியே வர முடியாது. வழக்கமாக, கடன் முழுமையாகச் செலுத்தப்பட்ட பிறகு, அந்த எதிர்மறைப் பதிவு தானாகவே நீக்கப்படும். இதன் காலவரையறை மாறுபடும்.

நிலுவைத் தொகை நீங்கள் ஒரு கடனை அல்லது நிலுவைத் தொகையை முழுமையாகச் செலுத்திய பிறகு, அந்தப் பதிவு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தானாகவே நீக்கப்படும். இந்த மூன்று ஆண்டு கால அளவு, நீங்கள் பணத்தைச் செலுத்திய ஆண்டின் முடிவில் இருந்து கணக்கிடப்படும்.

## விரைவாக நீக்க முடியுமா?

சில சந்தர்ப்பங்களில், சிறிய தொகையுள்ள கடன்களுக்கு (2,000 யூரோக்களுக்குக் கீழ்), நீங்கள் பணம் செலுத்திய ஆறு வாரங்களுக்குள் பதிவு நீக்கப்படும்.

தவறான பதிவுகள் சூவா பதிவில் ஏதேனும் தவறான தகவல் இருந்தால், அதை நீக்க நீங்கள் கோரலாம். உதாரணமாக, நீங்கள் ஏற்கெனவே செலுத்திவிட்ட கடன், இன்னும் செலுத்தப்படாமல் இருப்பதாகப் பதிவு செய்யப்பட்டிருந்தால், நீங்கள் அதனைச் சரிசெய்யக் கோரலாம்.

திறந்த கணக்குகள்: நீங்கள் பயன்படுத்தாத கிரெடிட் கார்டுகள் அல்லது வங்கி கணக்குகள் இருந்தால், அவற்றை மூடுவது உங்கள் ஸ்கோரை மேம்படுத்த உதவும்.

## உங்கள் சூவா பதிவை எப்படிச் சரிபார்ப்பது?

நீங்கள் ஒரு வருடத்தில் ஒருமுறை இலவசமாக உங்கள் சூவா பதிவின் நகலை (Datenauskunft) பெறலாம். இதில் உங்கள் தகவல்கள் சரியாக இருக்கிறதா என்பதைச் சரிபார்க்கலாம். தவறுகள் இருந்தால் உடனடியாக சூவாவைத் தொடர்புகொண்டு சரிசெய்யச் சொல்லலாம்.

## சூவா ஸ்கோரை மேம்படுத்துவதற்கான சில வழிகள்:

பில்களையும், கடன் தவணைகளையும் எப்போதும் தாமதமின்றிச் செலுத்துங்கள்.

அதிக எண்ணிக்கையிலான கிரெடிட் கார்டுகள் மற்றும் வங்கி கணக்குகள் வைத்திருப்பதைத் தவிருங்கள். சிறிய கடன்களை எடுப்பதையும், ஓவர்டிரா.ஃ.ப்ட் வசதியை அதிகம் பயன்படுத்துவதையும் தவிருங்கள்...

---

**பொன்மொழி...** வியர்வை சிந்தாத மனிதனாலும்

மை சிந்தாத பேனாவாலும்

எதையும் சாதித்திட முடியாது!... **- சேகுவேரா -**

# நாம் ஏன் பிறந்தோம், என்ன செய்தோம்....

- கெங்கா ஸரான்லி -

பிறப்பிலே மேன்மையானது மானிடப் பிறப்பு. இந்தப் பிறப்புப் பெற பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும் .சரி மானிடராகப் பிறந்து என்ன நன்மை, சிந்தித்தால் ”புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி பல்விருகமாகிப் பறவை யையாய் பாம்பாகி, செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும். பிறந்திழைத்தேன் எம்பெருமான்” என்று பாடினார்.

ஆகவே எல்லாவற்றிலும் மேன்மை பெற்று நிற்கிறது. தொல்காப்பியர் கூட உயிரினப் பாகு பாடு பற்றி எடுத்துக் காட்டி இருக்கிறார். அவர் உயிரினங்களை ஆறு வகை யாக வகுத்துள்ளார். அதாவது தொடுதல் உணர்வுடையவை - ஓரறிவுயிர் மரம், புல் போன்றவை தொடுதல் உணர்வுடன் சுவைத்தல் உணர்வையும் கொண்டவை- ஈரறிவுயிர் நத்தை, சிற்பி போன்றன. தொடுதல், சுவைத்தல், முகர்தல்- மூண்றறிவுயிர் கறையான், எறும்பு போன்றன. தொடுதல், சுவைத்தல், முகர்தல், பார்த்தல் நண்டு, தும்பி போன்றன. தொடுதல், , சுவைத்தல், முகர்தல், பார்த்தல், கேட்டல்- ஐயறி-வுயிர் விலங்குகள், பறவைகள் போன்றன. தொடுதல், சுவைத்தல், முகர்தல், பார்த்தல், கேட்டல், ஆகிய ஐந்துடன் மனம் ஒன்றுபட்டு சிந்திக்கின்ற அறிவு பெற்றோர் மாந்தர்.

அந்த ஆற்றிவு கொண்ட மனிதன் தான் தன் சிந்தனையின் தீவிரத்தால் கணிணி உலகத்தைப் படைத்து நிற்கின்றான். ஆனாலும் இந்த உயிரியல், அறிவியல் எல்லாம் நம் முன்னோர்கள் காலத்தில் இருந்தே இருக்கிறன.. விஞ்ஞானம் கண் முதல் அவர்கள் எல்லாம் எப்படி இவற்றைக். கண்டு பிடித்தார்கள். என்று நினைத்துப் பார்த்தால் ஆறறிவு படைத்த மனிதர் எவ்வளவு அற்புதங்களைப் படைத்திருக்கிறார்கள் என்பதை ஆச்சரியப் படவைக்கிறது. அப்ப மானிடனாகப் பிறப்பதற்கு அரிய தவம் செய்யத் தானே வேண்டும்.

ஐந்தறிவால் செய்ய முடியுமா என்ன. நாம் ஏன் பிறந்தோம் என்று கேட்டால் இப்படி புதுமைகள் செய்யவும் புதிய கண்டுபிடிப்புகள் செய்யவுமே எனலாம். அது மட்டுமல்ல நாம் என்ன செய்தோம் என்றால் மனிதம் போற்றி மனிதனாக மனித நேயம்த்துடன் வாழ்வது. ஆனால் இப்படி எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்தால் எல்லோருமே அப்படியில்லைதான்

தங்கள் சுயநலம் கருதி வாழுகிறார்கள். சிலர் பொதுப் பணிகள் செய்கிறார்கள், இதில் உண்மையாகச் செய்பவரும் உண்டு மண்ஆசிரியர் ,அமரர் சிங்கராஜா,, அவர்களைப்போல, சில இடங்களில் பொதுப்பணி என்னும் பெயரில் புகழ் பெற வேண்டும் என்று மனிதம் இல்லாமல் செய்வோரையும் காணலாம். எனவே நாம் ஏன் பிறந்தோம், என்ன செய்யதோம் என சிந்தித்துப் பார்க்கலாமே! விளைவு எப்படி இருக்குமென, ஒரு சின்னத் தேடல்தான்...

# அறுவடைத்திருநாள்..... (Erntedankfest)

-செல்வி சாமினா சிவதாசன் -

இப்பூமியில் மனிதர்கள் ஆகிய நாம் வாழத்தொடங்கிய காலத்திலிருந்தே, விவசாயமும் எங்களுடன் இணைந்தே காணப்படுகின்றது. தனக்குத் தானே தேவையான பழங்கள், மரக்கறிகள் மற்றும் தானியங்களை உற்பத்தி செய்து, உணவுகளை உருவாக்கி வாழ்ந்த காலத்தில் விவசாயம் வாழ்வாதாரமாக அமைந்தது. அதனால் மனிதர்கள் ஆகிய நாம் ஆரம்பகாலத்தில் இருந்தே விவசாயத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டோம்.

இன்றைய காலத்தில் அதுவும் குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளில் வாழ்க்கை முறையில் பல மாற்றங்கள் அடைந்திருந்தாலும், விவசாயம் இன்று வரை மனித வாழ்வின் அடிப்படை ஆதாரமாகவே திகழ்கின்றது. இதனால் தான் உலககெங்கும் வாழும் பெரும்பாலான மக்களால்,பல்வேறு பெயர்களில், வெவ்வேறு முறைகளில் விளைச்சலுக்கு நன்றி கூறும் வகையில் "அறுவடைத்திருநாள்" கொண்டாடப்படுகின்றது.

எமது சைவ சமயத்தில் தமிழ் நாட்காட்டிப்படி தை மாதம் முதலாம் திகதி அன்று உலகில் உள்ள அனைத்து தமிழர்களாலும் சூரிய பகவானுக்கு நன்றி கூறும் வகையில் தைப்பொங்கல் கொண்டாப்படுகின்றது. இந்த பண்டிகையின் முதல்நாள் வீட்டை சுத்தம் செய்து, அடுத்த நாளான பொங்கல் தினத்தில் அறுவடை செய்த புது அரிசி, காய்கறிகள், வெல்லத்துடன் பொங்கல் சமைத்து ஐம்பூதங்களுக்கும் நன்றி செலுத்தும் நாளாகவும் கொண்டாடுகிறோம்.

அமெரிக்க நாட்டில் கார்த்திகை மாதம் 4ஆம் வியாழக்கிழமை அன்று"Thanksgiving" கொண்டாப்படுகின்றது.இந்த நாள் அமெரிக்காவில் பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல ஆபிரிக்க நாடுகளில் நல்ல உணவு உற்பத்திக்காக கடவுளுக்கு நன்றி செலுத்தும் விழாவாக 3 நாட்கள் "யாம் விழா" கொண்டாடப்படுகிறது. இந்த அறுவடை பண்டிகையின்போது பல்வேறு கதைகளை சொல்லும் விதவிதமான ஆடல், பாடல்கள் களைகட்டும். இறந்து போன உறவினர்களை நினைவு கூரும் நிகழ்வுடன் ஆரம்பிக்கும் இந்த விழா, நல்ல விளைச்சலைத் தந்த இறைவனுக்கும், இயற்கைக்கும் நன்றி செலுத்துகிறது.

இது "ஹாம்(வள்ளிக்கிழங்கு) திருவிழா" என்றும் "ஹோமாவோதிறிழா" என்றும் அழைக்கப்பட்டு ஆவணி மாதம் கொண்டாடப்படுகின்றது. கொரியாவில் அறுவடை காலம் புரட்டாதி மற்றும் ஐப்பசி மாதங்களில் நடைபெறுகிறது. இந்த மாதங்களில் வரும் முழு நிலவு நாளில் இப்பண்டிகை "சூசாக்" அல்லது "அறுவடை நிலவுத்திருநாள்" என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது. இந்நாளில்உறவினர்கள் சூழ புதிதாக விளைந்த உணவுப் பொருட்கள் முன்னோருக்கு படைக்கப்படுகின்றன. ஜப்பானில் ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்தில் அறுவடை திருநாள் கொண்டாடப்படுகிறது. "ஒட்டோரி சாய்" என்றும், "ஒட்டோரி சாமா" என்றும் அழைக்கப்படும் இந்நாளில் நள்ளிரவில் தொடங்கி 24 மணி நேரத்துக்கு தொடர்ந்து இசையை இசைத்தபடி

ஒருவருக்கு ஒருவர் கைகுலுக்கி, பலத்த ஒலியுடன் இயற்கைக்கும், இறைவனுக்கும் நன்றி செலுத்துகின்றனர். நெல் அறுவடையின் அடிப்படையில், ஜப்பானில் அறுவடை திருவிழா கொண்டாடப்படுகிறது, பாரம்பரிய நிகழ்ச்சி முடியும்வரை புதிதாக விளைந்த நெல் அரிசியை யாரும் உண்ணக்கூடாது என்பது அந்நாட்டின் வழக்கம்.

இந்த வகையில் ஜேர்மனியில் ஐப்பசி மாதம் முதலாம் ஞாயிற்றுக்கிழமை அன்று "Erntedankfest" (ஜேர்மன் அறுவடைத்திருநாள்) கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவானது ஒரு கிறிஸ்தவ பண்டிகை என்றாலும், இதற்கு ஈஸ்டர் மற்றும் நத்தார் போன்ற கிறிஸ்தவப் பண்டிகைகள் போல இது ஒரு பைபிள் நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு கொண்டாப்படுவதில்லை. இது இறைவனின் படைப்புக்கு நன்றியை வெளிப்படுத்தும் ஓர் அழகிய விழாவாகும். இவ்விழாவின் வேர்கள் மிகவும் பழமைவாய்ந்தவை. கிறிஸ்தவத்திற்கு முந்தைய காலங்களிலும் கூட பண்டைய ஜேர்மனிய பழங்குடியினர், ரோமானியர்கள் மற்றும் கிரேக்கர்கள் அறுவடைத் திருவிழாக்கள் கொண்டாடினார்கள். கி.பி. 3ஆம் நூற்றாண்டில் இருந்து இது ஒரு கிறிஸ்தவ விழாவாக கொண்டாப்படுகின்றது. 1972ஆம் ஆண்டில் ஜேர்மனியில் நடைபெற்ற கத்தோலிக்க மாநாட்டில் ஜேர்மனிய அறுவடைத்திருநாளை ஐப்பசி மாதத்தின் முதலாம் ஞாயிற்றுக்கிழமை அன்று பின்பற்றுவதாக முடிவெடுக்கப்பட்டது.

இத்தினத்தன்று கிறிஸ்தவ ஆலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெறும். ஆலயங்களில் "பூமியின் படைப்புக்கும் மனித உழைப்புக்கும்" நன்றி கூறும் விதமாக பழங்கள், காய்கறிகள், பாண் மற்றும் திராட்சை மதுபானத்துடன் பலிபீடத்தை (Altar) அலங்கரிப்பார்கள். இவ்விழாவின் சிறப்பு அலங்காரப்பொருட்கள் அறுவடை கம்பளம் (Ernteteppich), அறுவடை கிரீடம் (Erntekrone), அறுவடை சக்கரங்கள் (Ernteräder), அறுவடை பொம்மை (Erntepuppe) ஆகும். அறுவடை கிரீடம் என்பதே இவ்விழாவின் பிரதான அடையாளமாகும். இது கோதுமை, அரிசி மற்றும் தானியங்களால் பின்னப்படுகின்றது. மேலும் கிராமப்பகுதிகளில் விவசாய வாகனங்கள், இசைக் குழுக்கள் மற்றும் பாரம்பரிய ஆடைகள் அணிந்து மக்கள் ஊர்வலம் செய்வார்கள். அத்துடன் பழைய அறுவடை மரபுகளை நினைவுபடுத்தும் வகையில் கண்காட்சிகள் நடைபெறும்.

பாரம்பரியத்திற்கு அப்பால் இன்றைய நவீன உலகில் ஏழைகளுக்கும், வீடற்றவர்களுக்கும் மற்றும் இயற்கை பேரழிவுகளாலும் போராலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதும், சுற்றுச்சூழலை பேணுவதும் இவ்விழாவின் முக்கியமான நோக்கமாகும். தற்போது தேவாலயங்கள் காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் உலகளாவிய நீதி போன்ற பிரச்சனைகளுக்கு அதிக கவனம் செலுத்தி வருகின்றன. அதாவது இந்நாளை சமூக பிரதிபலிப்பிற்காக ஒதுக்கி பயன்படுத்தப்படுகின்றது.

அனைத்து மக்களும் எல்லா வளமும் நலமும் பெற்று அமைதியுடன் வாழ வேண்டுமென இறைவனை பிரார்த்தித்து இயற்கைக்கும், இறைவனுக்கும், மனித உழைப்பிற்கும் நன்றி செலுத்தும் நோக்குடன் அறுவடைத் திருநாளை அனைவரும் கொண்டாடுவோம்....

# மாற்றம் வேண்டும்..

யாழ்ப்பாணத்தில் சமூக உளவியல் 40 ஆண்டுகளாக மாறாமல் இருப்பது உண்மையில் கவலைக்குரியது:

பாடசாலை ,ரியூசன் , வேலை இல்லா பட்டதாரி, வெளிநாட்டில் உறவினரின் பணத்தில் சடங்கு, வீடு கட்டும் கலாச்சாரம் மட்டுமே அதிகமாகிறது.

ஆனால் உண்மையான திறன்கள் (இயல், இசை, நாடகம், கைத்தொழில், தொழில்நுட்பம், விளையாட்டு, விவசாயம்) குறைவாக மதிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் இன்று கூட சிறிய கட்டணத்தில் பலவிதக் கலைகளை கற்றுக் கொள்ளும் வாய்ப்பு தருகிறது. ஆனாலும் மக்கள் மனப்போக்கு இன்னும் ”பட்டம்” ”வேலை” ”வெளிநாடு” என்ற ஒரே பாதையில் சிக்கிக் கொண்டுள்ளது.இதிலிருந்து வெளியே வர மனப்போக்கு மாற்றம் தேவை:

1. திறமை மதிப்பு , பட்டப்படிப்பு மட்டுமல்ல, கைத்திறன் கொண்டவர்களும் சமூகத்தில் மதிப்பு பெற வேண்டும்.

2. இளைஞர் சுயதொழில், இசை, நாடகம், IT, கைத்தொழில், விவசாயம் இவைகளை தொழிலாக மாற்றும் வாய்ப்பு உருவாக்க வேண்டும்.

3. சமூக ஊடகம், சந்தை இன்றைய உலகம் ஆன்லைன் சந்தையைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாண இளைஞர்கள் தங்கள் கலைத்திறமைகளை சர்வதேச சந்தையில் விற்க கற்றுக்கொள்ள வேண்டும்.

4. யாழ்ப்பாணத்தில் வெற்றி கண்ட கலைஞர்கள், தொழில்முனைவோர், விவசாயிகள் இவர்கள் கதைகள் பள்ளிகளில் சொல்லப்பட வேண்டும்.

ஒரு சிறிய மாற்றம் கூட பெரிய தாக்கத்தை கொடுக்கும். உதாரணமாக:

ஒவ்வொரு பள்ளியிலும் மாதம் ஒருமுறை ”திறமைகள் நாள்” (Music, Dance, Handwork, Tech).

வெளிநாட்டில் உள்ள யாழ்ப்பாணத் தமிழ் வல்லுநர்கள் Zoom வழியாக குழந்தைகளுக்கு Guest Lecture.

சிறு கைத்தொழில் மையங்கள் (விவசாய உற்பத்தி, கைவினை, IT Freelancing).

கேள்வி:யாழ்ப்பாணத்தில் குறைந்த கட்டணத்தில் பலவற்றைக் கற்க முடியும்.

நாம் அதை மக்களை ஈர்க்கும் ஒரு இயக்கமாக மாற்றினால் எந்த துறையை முதலில் முன்னிறுத்தலாம் என்று நினைக்கிறீர்கள்?

இசை/கலை, நாடகம்/நடனம், கைத்தொழில்/விவசாயம்,தொழில்நுட்பம் (IT, AI, Freelancing) உங்கள் பார்வையில் எது முதல் படியாக இருக்க வேண்டும்?

## காற்றாலை...



காற்றாலை (windmill) என்பது-காற்றால் உந்தப்படும், ஆற்றல் உற்பத்தி செய்யும் பொறி ஆகும். காற்று வீச்சினால் ஏற்படக்கூடிய ஆற்றலைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் பொறி அமைக்கப்பட்டு, காற்று விசைச் சுற்றுக் கலன்களில் இருந்து பெறப்படும் இயந்திர ஆற்றல், மின் ஆற்றலாக மாற்றப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது. இதில் இருக்கும் நீளமான தகடுகள் இறக்கைகள் (Blades) காற்றின் வேகத்தால் சுற்றுவதால், அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் மின்னாக்கி (Generator) இயங்குவதன் மூலம் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. புதுப்பிக்கக்கூடிய ஆற்றலான காற்றாலை மின்சாரம், சுற்றுச்சூழலை சீரழிக்காத பசுமை ஆற்றலாகக் கருதப்படுகிறது.

இந்த வகையில் செய்யப்படும் ஆற்றல் உற்பத்தி சுற்றுச்சூழலைப் பாதிக்காத தூய ஆற்றல் ஆகும். உதாரணமாக, அனல்மின் நிலையங்களின் மூலம் வெளியேற்றப்படும் காற்று மாசுபாடு போன்ற பாதிப்புகள் எதுவும் காற்றாலைகளால் ஏற்படுவதில்லை. பொதுவாக, இது கம்பங்கள் முதலிய பெரிய, உயர்ந்த கட்டிடங்களில் இருக்கும். பழங்காலத்தில், காற்றாலைகளின் ஆற்றல் தானியங்களை அரைக்கவும், நீர் இறைக்கவும், மர அறுவைக்கும் பயன்பட்டது. தற்காலத்தில், இவை மின் உற்பத்திக்கே அதிகம் பயன்படுவதால் காற்றுச் சுழலிகள் (wind turbines) என்றும் அழைக்கப்படுகின்றன.

## மன்னாரின் நிலை...

நமது நாட்டின் மன்னார்ப் பகுதியில் இந்தக் காற்றாலை விடயமாக பெரும் பதட்டம் நிலவிவருகின்றது. சுற்றுச்சூழல் பாதிப்பு, கடல்வாழ் உயிரினங்களின் அழிவு, கனிமமணல் அகழ்வு, கரையோர நில அபகரிப்பு, மீனவர் பாதிப்பு என பொதுமக்களின் குற்றச்சாட்டுக்களால் காற்றாலைகள் நிறுவமுடியாமல் அரசு தடுமாறிக்கொண்டிருக்கின்றது. பொதுமக்களின் போராட்டமும் தொடருகின்றது.

இந்த நிலையை உணர்ந்த ஜனாதிபதி அவர்கள் வல்லுநர்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பணித்துள்ளார். பொது மக்களின் மன்னார்ப் போராட்டம் தொடர்கின்றது. ஆகவே பொதுமக்களுக்கு ஆபத்து வராத நல்ல இந்த திட்டத்தை முன்னெடுத்தால் சகலருக்கும் நன்மையே!..




## 61 வயதில் உலகசாதனை படைத்துள்ள முதியவர்..

### திரு செ திருச்செல்வம் தென்மராட்சியின் தமிழ் மைந்தன்..

### புதிதாக இரண்டு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்..

மனிதன் சாதனை புரிவதற்கு வயது ஒரு தடையல்ல என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார் ஒரு தமிழன். யாழ் - தென்மராட்சிப் பகுதியில் வசிக்கும் 60 வயதுடைய திரு செ திருச்செல்வம் என்பவர் ஒரே தடவையில் இரண்டு உலக சாதனைகளைப் புரிந்து சாதனை நிலைநாட்டியுள்ளார்.

இவர் 1.500 கிலோ எடைகொண்ட வாகனம் ஒன்றை தனது உடலில்க்கட்டி கைதடியிலிருந்து சாவகச்சேரி பஸ் நிலையம்வரை 7 கிலோமீட்டர் தூரம் இழுத்துச் சென்று உலக சாதனை படைத்திருக்கிறார். அடுத்த சாதனை 2.500 கிலோ நிறைகொண்ட பிக்கப் வாகனம் ஒன்றைத் தனது காதுகளில் கட்டி 50 மீட்டர் தூரம் இழுத்துச் சென்று உலக சாதனை படைத்திருக்கிறார். இதே வாகனத்தைத் தனது தாடியால் 50 மீட்டர் தூரம் இழுத்துச்சென்று சாதனை புரிந்துள்ளார்.

இந்த நிகழ்வை கல்வியாளர்கள், தென்மராட்சி பிரதேசசபை உத்தியோகத்தர்கள் மற்றும் பெருவாரியான பொதுமக்கள் விளையாட்டு ரசிகர்கள் மத்தியில் இந்தச் சாதனைகளை நிலைநாட்டினார்.

61 வயது நிரம்பிய இந்த வாலிபன் இதற்கு முன்னரும் பல சாதனைகளுக்குச் சொந்தக்காரனாவர். இது இவரது நான்காவது உலக சாதனையாக " சோழன் உலகசாதனைப் புத்தகத்தில் " இடம்பிடித்துக் கொண்டுள்ளார். வாழ்த்துகளும் பாராட்டுகளும் உரித்தாகட்டும். இந்த 61 வயது வாலிபன் இன்னும் பல சாதனைகளைப் புரிய வாழ்த்துகின்றோம்!..




Wimbledon Championships 2025

# இங்கிலாந்து விம்பிள்டன் ரெனிஸ் போட்டி..

## இத்தாலிய வீரர் சின்னர்(J. Sinner) சம்பியன் கிண்ணத்தை வென்றார்.

## இவர் பெற்ற பரிசுப்பணம் 3 மில்லியன் பவுண்ட் (3.5 மில் யூரோ)

லண்டன் - விம்பிள்டன் போட்டியானது 1887ம் ஆண்டு ஆரம்பமானது. 2025ம் ஆண்டு 138 வது வருடப் போட்டியாகும்.இந்த வருடத்தின் விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகள் 30.06.2025 ஆரம்பித்து 13.07.2025 இல் முடிவடைந்தன. Australian Open, French Open, Wimbledon, US open என இந்த நான்கு போட்டிகளும்தான் உலகில் கூடுதலான பரிசுப்பணமும் கூடுதலான புள்ளிகளும் வழங்கப்படும். இதை GrandSlam போட்டி என்று அழைப்பார்கள்.

இந்த வருடத்தில் ஏற்கனவே Australian Open, French Open நடைபெற்று தற்போது று¨அடிடநனழடெ போட்டியும் நடைபெற்றுள்ளது. இப்போட்டியின் பணப்பரிசுதான் ரெனிஸ் வரலாற்றில் அதிகூடிய பணப்பரிசாகும். ஆண், பெண், இரட்டையர் ஆண், இரட்டையர் பெண், கலப்பு ஆண ் - பெண் என சகல போட்டிகளுக்குமான மொத்தப் பணப்பரிசுத்தொகை 53.5 மில்லியன் பவுண்ட் ஆகும். வெற்றிபெறுபவர்கள் பெறும் பணம்..

1வது பணப்பரிசு 3.00 மில் பவுண்ட் (30லட்சம் பவுண்ட்)

2வது பணப்பரிசு 1.52 மில் பவுண்ட் (15லட்சம் பவுண்ட்)

## ஆண்கள் பிரிவு..

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் தற்போதய உலகின் 1ம் 2ம் தரவரிசையிலுள்ள இத்தாலி வீரர் சின்னர் ( J. Sinner ) ஸ்பெயின் வீரர் Alcaraz Carlos மிகக்கடுமையாக மோதிக் கொண்டதில் 4- 6, 6 - 4, 6 - 4, 6 - 4 என்ற புள்ளி அடிப்படையில் இத்தாலி நாட்டுவீரர் சின்னர் வெற்றிபெற்று விம்பிள்டன் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றதுடன் 30 லட்சம் பவுண்ட்களை அள்ளிச்சென்றார். இது இவரின் முதலாவது விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் வெற்றிக்கிண்ணமாகும்.

## பெண்கள் பிரிவு..

பெண்களுக்கான விம்பிள்டன் ரெனிஸ் போட்டியில் போலந்து நாட்டைச் சேர்ந்தவரும் உலகின் 8ம் நிலையிலுள்ளவருமான ஸ்வியாரெக்கும் (I.Swiatek) அமெரிக்காவைச் சேர்ந்தவரும் உலகின் 13ம் நிலையிலுள்ளவருமான அனிசிமோவாவும் (A.Anisimova) மோதிக் கொண்டதில் 6 - 0, 6- 0 என்ற புள்ளியடிப்படையில் போலந்து நாட்டு வீராங்கனை வெற்றிபெற்று 30 இலட்சம் பவுண்ட்களையும் தோல்வியடைந்தவர் 15 லட்சம் பவுண்ட்களையும் பெற்றுக் கொண்டனர்.

விளையாட்டு என்றால் நம்மவர்கள் நினைத்துக்கொள்வது பொழுது போக்கு என்றுதான். இது தவறாகும் இன்று உலகில் விளையாட்டுத்துறையால் பல வீரர்கள் வருடாந்தம் பல கோடிகளைச் சம்பாதிக்கிறார்கள் என்பது உண்மையான விடயமாகும். உதாரணத்துக்குக் கார் ஓட்டம், உதைபந்து, ரெனிஸ், கிரிக்கட், கூடைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுகளில் பல வீரர்கள் வெற்றி பெற்றுச் சாதனை படைத்து வருவதுடன் கோடிகளில் மிதக்கும் கோடீஸ்வரர்களாகவும் பரிணமித்து வருகிறார்கள். ஆகவே நம் இனத்தவர்களும் விளையாட்டுத்துறைகளில் கவனம் செலுத்தி முன்னேறவேண்டும்..

-------------------------------------------------------------------

**16ம் பக்கம்**



## கணக்குப்புதிர் விடைகள்...



**புதிர் - 1**

A - 6

B - 11

C - 12

D - 6

E - 10

F - 50

G - 25

H - 62

**புதிர் - 2**

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | 18 | 26 | 19 | 33 |
| 13 | 27 | 30 | 25 | 15 |
| 31 | 29 | 12 | 21 | 17 |
| 28 | 16 | 10 | 34 | 22 |

# உக்ரைன் போர் முடிவுற சாத்தியமா?

**இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உக்ரைன் போரல், ஐரோப்பாவில் மிகப்பெரிய இடம்பெயர்வு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஐ.நா.வின் கூற்றுப்படி, சுமார் 10 மில்லியன் உக்ரேனியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 3.7 மில்லியன் மக்கள் உக்ரைனுக்குள் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர், அதே நேரத்தில் 6.9 மில்லியன் மக்கள் அகதிகளாக வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.**

உக்ரைன் - ரஷ்ஷியா போரால் பல்லாயிரம் பேர் மாண்டு மடிந்திருக்கிறார்கள். பல லட்சம் பேர் சொந்த நாட்டிலும் பிற நாடுகளிலும் அகதிகளாக இடம் பெயர்ந்திருக்கிறார்கள். இது வரலாறு காணத இழப்புக்களாகவே கருதப்பட்டுள்ளது.

இந்தப் போர் நீண்டு நிலைப்பதற்கு அமெரிக்கா, ஐரோப்பா வல்லாதிக்க நாடுகள் காரணமாக விளங்குகின்றன. இந்த நாடுகளின் ஆயுத விற்பனை, வல்லாதிக்கவெறி, எதிரான நிலைப்பாடு என்பனவும் காரணமாக இருக்கின்றன.

ரஷ்ஷியாவும் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குப் போரைக் கைவிடாது நடாத்தவேண்டிய நிலையில் இருந்து வருகின்றது. வல்லாதிக்க நாடுகளின் ஆதிக்கத்தை தடைசெய்யவே ரஷ்ஷியா கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அமெரிக்க ஜனாதிபதியும் தனக்கு நோபல்பரிசு கிடைக்கும் என எண்ணி எல்லா வழிகளிலும் முயற்சிக்கின்றார். மறுபக்கம் தமது நாட்டின் ஆயுத விற்பனையில் குறியாகவே இருந்து வருகின்றார்.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது வல்லரசு நாடுகளின் வல்லாதிக்கப் போட்டி, ஆயுதவிற்பனைதான் காரணமாகும் என்பது புலப்படும். எனவே போர் முடிவுக்கு வந்தால் பல நாடுகளுக்கு அமைதியும் நன்மையும் கிட்டும் என்பது உண்மையான விடயமாகும்.

# தாயகச்செய்திகள் சில...

30.08.2025- செம்மணி பதைகுழி, மற்றும் காணாமல் போனவர்கள், இராணுவ அடக்குமறைகளுக்கு எதிரான கையெழுத்து பதிவு நிகழ்வும் அமைதிப் போராட்ட நிகழ்வுகள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றது.

29.08.2025- சிங்கப்பூர் தமிழ் வள்ளல் குடும்பத்தின் முழுமையான நிதிப் பங்களிப்பில் தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோவிலில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 111 புதுமணத்தம்பதிகளுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டது. இலங்கையின் வரலாற்றில் இது மிகப்பெரும் கொடை எனக் கருதப்பட்டுள்ளது.

28.08.2025- செம்மணி மனிதப்புதைகுழியில் 46 நாட்கள் தொடரான அகழும் பணிகளில் 187 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. ஏற்கனவே தமிழர் பிரதேசங்களில் ஐந்நூறு வரையிலான எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதும் வரலாறாகும்.

26.08.2025- வரலாற்றுமிக்க பொலிஸ் நடவடிக்கை ஒன்று இடம்பெற்றது. அதாவது பாதாள உலகக்குழுவைச்சேர்ந்த 6 இலங்கையர்கள் இந்தோனிசியாவில் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர்.

25.08.2025- இலங்கை வரலாற்றின் முதலாவது பெண் பதிவாளர் நாயகமாக இலங்கைத் தமிழ்பெண் ஒருவர் நியமனம் பெற்றுப் பதவி ஏற்றுள்ளார். இவர் திருகோணமலையைச் சேர்ந்த மூத்த நிர்வாக அதிகாரியான திருமதி சசிதேவி ஜலதீபன் ஆவார்.

24.08.2025- 1.62 கோடி ரூபா ஊழல்மோசடி காரணமாக முன்னாள் ஜனாதி-பதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவினால் பிணையில் விடப்பட்டார். இலங்கை வரலாற்றில் ஜனாதிபதி ஒருவரைக் கைதுசெய்தது இதுதான் முதல் தடவையாகும்.

23.08.2025- 1.1.2025 - 28.08.2025வரை நாட்டில் 89 துப்பாக்கிச்சூட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றதில் 48 பேர் பலி. 50 பேர் காயம்.

22.08.2025- 1.1.2025 - 31.07.2025வரை 37 பெண்களும் 257 ஆண்களும் நீரில் மூழ்கி இறந்துள்ளனர்.

20.08.2025- 1.1.2025 - 18.08.2025வரை 15 லட்சம் சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். இதனால் அரசுக்குப் பெரும் வருவாய்.

18.08.2025- 2020 - 2024 காலத்தில் 2.000 மேற்பட்ட யானைகள் பல்வேறு காரணங்களால் உயிரிழந்துள்ளன. இந்தவருடம் முதல் 7 மாதங்களில் 288 யானைகள் இறந்துள்ளன. இந்த யானைகளால் இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு அதிக வருமானம் கிடைத்துவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

16.08.2025- மன்னார்-மடு மாதா அன்னை கோவில் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. நாடு முழுவதிலிருந்தும் 8 லட்சம் பக்தர்கள் கலந்துகொண்டனர்.

15.08.2025- இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளால் 2022 முதல் 31.08.2025வரை 321 இலங்கையர்கள் படகுகள் மூலம் இந்தியா சென்று தஞ்சம் கோரியுள்ளனர்.

14.08.2025- இலங்கை அரசின் பணத்தில் கல்வி கற்றுப் பட்டதாரியாகி வெளிநாடுகள் சென்றவர்கள் 50 வீதமானோர் நாடு திரும்புவதில்லை. இதனால் ஆண்டுதோறும் அரசுக்குக் கோடிக்கணக்கில் நட்டம் எற்பட்டுள்ளது.

13.08.2025- நுரையீரல் புற்று நோய் நாட்டில் அதிகரித்து வருகின்றது. ஆண்டுதோறும் 2.000 - 3.000 புதியநோயளர்கள் காணப்படுவதாக மருத்துவ அறிக்கை அறிவித்துள்ளது.

12.08.2025- 01.01.2025 - 31.08.2025 வரை பல்வேறு காரணங்களுக்காக நாட்டில் 377 தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

11.08.2025- 01.01.2025 - 31.07.2025 வரை நாட்டில் 1.33.678 புதிய வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டதாக மோட்டார் பதிவுத்திணைக்களம் தெரிவித்தது.

10.08.2025- வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்களுக்காகச் சென்றவர்கள் விபத்து, நோய், வேறு பல காரணங்களால் இதுவரை 3.179 ஆண்களும் 1.615 பெண்களும் இறந்திருக்கிறார்கள் என வெளிநாட்டுப் பணியகம் அறிவித்தது.

08.08.2025- முப்படைகளிலிருந்தும் சட்டபூர்வமாக இராஜினாமாச்செய்யாத படையினர் 3.504பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதே வேளை 2089 சட்டவிரோத துப்பாக்கிகள் மீட்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

07.08.2025- முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் 35.3.666 ச.கி.மீ பரப்பளவில் 79.917 அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றப்பட்டதாக"ஷார்ப்" நிறுவனம் தெரிவித்தது.

06.08.2025- வடமாகாண கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்காக யப்பான் அரசு மேலும் 13 கோடி 14 லட்சம் ரூபா நிதி உதவி புரிந்துள்ளது.

05.08.2025- கொழும்பு - காங்கேசன்துறை தொடரூந்து சேவை ஆரம்பிக்கப்பட்டு 120 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளது.

04.08.2025- உலகின் சிறந்த தீவுகளின் பட்டியலில் இலங்கை முதலிடம் பிடித்திருப்பதாக"பிக்-7 டிராவல்" நிறுவனம் அறிவித்தது.

03.08.2025- போதைப்பொருட்கள் குற்றம் 1.1.2025 - 31.07.2025வரை 1.22.913 பேர் கைது. பொலிஸ் அறிவித்தது.

02.08.2025- வீதி விபத்துக்களால் கடந்த 7 மாதங்களில் 1.355 பேர் பலி.

01.08.2025- பல்வேறு காயங்களினால் ஆண்டுதோறும் 12.000 பேர் உயிரிழப்பு. வயதானவர்களில் 10 பேரில் ஒருவர் சிறுநீரக நோயாளி என அறிவிப்பு.

01.08.2025- கடந்த 3 ஆண்டுகளில் 1.500 வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். புலமைப்பயிற்சி, மற்றும் பயிற்சி, மெலதிகப்படிப்புக்களுக்குச் சென்றவர்களும் திரும்பவில்லை. இதனால் அரசுக்கு வருடாவருடம் கொடிக்கணக்கான ரூபா நட்டம் ஏற்படுகின்றது.

# உலகச் செய்திகள் சில...

31.08.2025- பலஸ்தீனம் காஸா பகுதியில் பசி பட்டின அதிகரிப்பு 5லட்சம் பேர் கடுமையாகப் பாதிப்பு 2023ம் ஆண்டு ஆரம்பித்த இஸ்ரேல்-பலஸ்தீனப் போராட்டத்தில் இதுவரை 18.500 சிறுவர்கள் உட்பட 63 ஆயிரம்பேர் பலியாகியுள்ளனர். நிவாரண உணவு வழங்கலில் நெரியுண்டு 48 பேர் பலி.

25.08.2025- பாக்கிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 700பேர்வரைபலி

23.08.2025- 2025 ஜனவரி - யூலை வரை சவுதி அரேபியாவில் 230 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

21.08.2025- பாக்கிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி இம்ரான்கானின் ஆதரவா-ளர்கள் 166 பேரிக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

20.08.2025- இந்தியாவிலுள்ள 140 கோடி மக்களில் 28 கோடி பேர் கடனா-ளிகள் என அரசு அறிவித்துள்ளது.

18.08.2025- இந்தியா கர்நாடகா மாநிலத்தில் 1998 - 2024 காலப்பகுதியில் இந்து ஆலயங்களில் நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வன்முறையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

15.08.2025- கடந்த 40 வருடங்களாகப் போராடிய குர்திஸ்தான் விடுதலை-லப் போராட்ட இயக்கம் ஆயுதங்களை ஒப்படைத்து ஜனநாயக வழிக்குத்திரும்பியுள்ளனர். 1978ல் இந்த இயக்கம் ஆரம்பித்தது. 1984 தொடக்கம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த ஒக்ஸலான் 26 ஆண்டுகள் சிறையில் இருந்துவருகிறார்.

12.08.2025- பிரான்ஸ், பிரித்தானியா, ஸ்பெயின், போத்துக்கல், சுவீடன் உள்ளிட்ட சில நாடுகளில் வரலாறுகாணாத வெப்பம் 2.300 பேர்வரை உயிரிழந்துள்ளனர்.

10.08.2025- 600 வருடங்களின் பின் ரஷ்ஷியாவில் எரிமலை வெடித்துள்ளது.

08.08.2025- மத்தியகிழக்கு நாடான யெமன்நாட்டில் படகுவிபத்து68 பேர் பலி

06.08.2025- செல்வ்பி மோகத்தால் சென்ற வருடத்தில் பலியானவர்கள் பட்டியலில் இந்திய முன்னணி. இந்த வருடத்தில் இந்தியா 214பேர், அமெரிக்கா 37 பேர், ரஷ்ஷியா 19 பேர் பலியாகியுள்ளனர்.

05.08.2025- ஈரானில் வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில்62 பேர் பலி.



**தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில்**
**111 ஜோடிகளுகள் திருமண பந்தத்தில்**

தமிழர்கள் வாழும் பிரதேசத்தில் உள்ளதுதான் புகழ்மிக்க செல்வச்சந்நிதி முருகன் ஆலயம். இது இலங்கையின் பிரதான கோவிலாகத் திகழ்கின்றது. இந்தக் கோவிலில்தான் அதிசயம் மிக்க வரலாற்றுத் திருமண நிகழ்வு ஒன்று நடந்திருக்கின்றது. ஒரு திருமணம் அல்ல 111 சோடிகளுக்கு ஒரே நேரத்தில் திருமணம் நடைபெற்ற அதிசய நிகழ்வானது இலங்கையில் சாதனை வரலாறாகப் பதியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். சிங்கப்பூரில் நெடுங்கால்மாக வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு தமிழ்க்குடும்பமே இந்தப் பெருங்கொடைக்குச் சொந்தக் காரார்களாவர். அதாவது தமது முழுப்பணச் செலவில் தாலி, கூறை, உடை, பணம், கலியாணச்செலவு என அத்தனையையும் பொறுப்பேற்று முகம்தெரியாத 111 இளம் சோடிகளுக்கு நடாத்தி வைத்தது பெரும் சாதனையாகவே கருதலாம்.

கோடிக்கணக்கான பணம், பொருள், சொத்துக்கள் இருந்தாலும் மனம்வராத இன்றைய உலகில் இப்படியான நற்காரியத்தைச் செய்த இந்தச் சிங்கப்பூர் தமிழ்க் குடும்பத்தை நாம் எல்லோரும் பாராட்டி நன்றிசொல்வோம். இவர்கள் நூறாண்டுகள் நோய் நொடி இல்லாமல் வாழவேண்டும் என இறைவனை வேண்டுவோம்.

சாதி, சமயம், நிறம், கல்வி, பணம், பொருள், காணி, வீடு, சொத்து, சீதனம் என நிறையவே பார்த்து ஏற்றத்தாழ்வுகளுடன் வாழ்ந்துவரும் யாழ்ப்பாணச் சமூகத்திற்கு இந்த நிகழ்வானது சாட்டையடியாகவே அமைந்திருக்கும்.

சீதனக்கொடுமையால் எத்தனையோ கலியாணங்கள் நிறைவேறாமல் முதிர்கன்னிகளும் ஆண்மகன்களும் அல்லல்படும் இன்றைய காலகட்டத்தில் இப்படியான நன்கொடைமூலம் 111 சோடிகளுக்கும் திருமணம் செய்துவைத்தது ஒரு வரலாற்றுச் சிறப்பான நிகழ்வாகும். இந்த மணமக்களைத் தெரிவுசெய்தது யாழ் மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்களாகும். சிறப்பானமுறையில் ஒரு முன்மாதிரியான நிகழ்வை நடாத்தி வைத்த அத்தனைபேரையும் கடவுள் கைவிடமாட்டார் என்பது உறுதியே!..

# அமுதசுரபி

## இந்திராணி மேழிக்குமரன் அறக்கட்டளை நிதியம்

## INDRANI MEZHIKUMARAN TRUST FUND

**(AMUTHASURABI)**

57/59, 3ம் ஒழுங்கை, வெளிக்குளம், வவுனியா, இலங்கை.
57/59, 3rd LANE, VELIKULAM, VAVUNIYA, SRI LANKA.

பதிவு இல: VA/LA/T/RE.816

தொ.பே.இல +94 77 4248267

**தலைவர்**
கலாபூஷணம், தமிழ்மணி, முனைவர்
கதிரிப்பிள்ளை அருந்தவராஜா
(மேழிக்குமரன்)

**உப தலைவர்**
திரு.இராமசாமி இராஜேஸ்வரன்

**செயலாளர்**
திருமதி.சந்திரகுமாரி இராஜேஸ்வரன்

**உப செயலாளர்**
செல்வி. வனிதா சேனாதிராஜா

**பொருளாளர்**
திரு.ஆறுமுகம் அருளானந்தம்

**செயற்குழு உறுப்பினர்கள்**
திரு.இந்திரன் சஜீந்திரா
திருமதி.சுபாசினி ஜெயசங்கர்
திரு.நடராஜா மதிகரன்
திரு.அந்தோனி பிரான்சிஸ்
திருமதி.லோகேஸ்வரி விஜயகுமார்
திருமதி.பேபிரகுணா ரூபன்

**ஆலோசகர்கள் :**
திரு.தம்பிராஜா சிவகுமாரன் (தமிழருவி)
திரு.நடராஜா பார்த்திபன்
திரு.இராஜகோபால் தேசிகன்
திரு.கொன்ஸன்டைன் சகாயராசா (பாபு)
திரு.லோகநாதன் வாகீசன்

29.08.2025

திரு.வ.சிவராஜா அவர்கள்

“மண்” சஞ்சிகை ஆசிரியர்

டியுஸ்பேர்க்

ஜேர்மனி

ஐயா!

பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதிஉதவி வழங்கல் தொடர்பாக...

வணக்கம்.

“அமுதசுரபி” அறக்கட்டளை ஊடாக வவுனியாவின் ஐந்து கிராமங்களில் இயங்கிவரும் “எழுச்சியின் கரங்கள்” பெண்கள் வட்டம் அமைப்பினருக்கு நீங்கள் பக்கபலமாக இருந்து பேருதவி புரிந்து வருகின்றீர்கள்.

அந்தவகையில் பல்கலைக்கழக மாணவர்களாகிய செல்வி.டென்சிகா சிவானந் - சிதம்பரபுரம், வவுனியா (மொறட்டுவ பல்கலைக்கழகம்) செல்வன்.வில்வராசா ரதீபன் - செட்டிகுளம், வவுனியா (ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்) ஆகிய இரு மாணவர்களும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்கள். தங்களது கல்விக்கு உதவுமாறு எம்மிடம் கோரிக்கை விடுத்தனர். அதனை நாம் தங்களுக்குத் தெரிவித்தபோது மிகுந்த அக்கறையுடன் அதற்கான அன்பளிப்பாளரை கண்டுபிடித்து (திருமதி.பிரிந்தாவனி) நிதியுதவியாக ரூபா ஒரு இலட்சத்து அறுபத்திமூவாயிரத்து இருநூற்றி தொண்ணூற்றி ஒன்று இருபத்தேழு சதம் பெற்று 06.08.2025இல் எமக்கு அனுப்பி வைத்துள்ளீர்கள்.

இது மாணவர்களுக்கு பேருதவியாகும். நாமும் எமது மாணவர்களும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். தங்கள் மனிதநேயப் பணி தொடர வாழ்த்துகள்.

உண்மையுள்ள

க.அருந்தவராஜா

தலைவர்

“கரங்களைக் கொடுத்து தரங்களை உயர்த்துவோம்”

வங்கிக் கணக்கிலக்கம்: INDRANI MEZHIKUMARAN TRUST FUND
100880331104 தேசிய சேமிப்பு வங்கி (NSB - VAVUNIYA)

# The Salvation Army
## Shalom Child Development Centre

William Booth
Founder
Lyndon Buckingham
General
Nihal Hettiarachchi
Territorial Commander

Kandy Road, Kaithady, Sri Lanka. Telephone: 021 - 2057044

FOCUS ON TRANSFORMATION SRI LANKA TERRITORY 2024-2026

திரு திருமதி துவர்மன் - சிவாஹினி தம்பதினரின்

செல்ல மகன் அஞ்ஜான்தேவ்

14.08.2025

**நன்றி தெரிவித்தல் தொடர்பானது**

மேற்படி விடயம் தொடர்பாக எமது இரட்சணியசேனை சாலோம் அபிவிருத்தி நிலையத்தின் சிறுவர்களுக்கு தங்களால் கொடுக்கப்பட்ட **ரூபாய் 32,493.40/=** நன்கொடையானது எமக்கு கிடைக்கப்பெற்றது என்பதை அறியத்தருவதோடு. திரு திருமதி துவர்மன் - சிவாஹினி தம்பதினரின் செல்ல மகன் அஞ்ஜான்தேவ் அவர்களின் பிறந்தநாளையொட்டி எமது இல்ல பிள்ளைகளுக்கு மதிய உணவு போசணை வழங்கியதற்கு நன்றியைத் தெரிவிப்பதோடு. மேலும் பிறந்த நாளை கொண்டாடும் மகனுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இறைவனுடைய ஆசீர்வாதம் உங்களது குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் கிடைப்பதாக. உங்களது இந்த சேவை தொடர இறைவனை பிராத்திக்கின்றோம்..

கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக

நன்றி

K. [signature]

Administrator
The Salvation Army
Shalom Child Development Center
Kaithadi, Jaffna.

இல்ல முகாமையாளர்

பிள்ளைகள் மற்றும் பணியாளர்கள்

*"Therefore, if anyone is in Christ, he is a new creation; old things have passed away; behold, all things have become new." 2 Corinthians 5:17 NKJV*

*The Salvation Army:* Part of the Christian Church and registered charity serving in 134 countries of the world. Serving in Sri Lanka since 1883.
A member of the Sri Lanka National Christian Council and National Christian Evangelical Alliance.

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai
Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015 T.P:- 0212060620 FarmNo:-0213204790 Mobile:-0774868085
Fax:-0774868085 Viber:-0774868085


திகதி:- 15/08/2025

திரு.வை சிவராஜா,

மண்சஞ்சிகை,

யேர்மனி.

## நன்றி நவிலல்

13.08.2025 அன்று தங்களிடம் ஒளிரும் வாழ்வு அமைப்பினராகிய நாங்கள் எமது பிரதேசமான துணுக்காய் பிரிவின் விநாயகபுரம் அ.த.க பாடசாலை மாணவர்கள் இடம்பெற்ற தற்காப்பு கலை போட்டியில் வெற்றி பெற்று தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகி இருந்தனர்.

அப் போட்டிக்கு செல்வதற்காக மாணவர்களுக்கான போக்குவரத்து மற்றும் உணவு, சீருடைகளுக்கான நிதி உதவியினை பாடசாலை நிர்வாகம் எமது அமைப்பிடம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் தங்களிடம் இக் கோரிக்கையை முன் வைத்திருந்தோம். அதனை ஏற்று துரித கதியில் ரூபாய் நாற்பதாயிரம் (40.000) நிதியை பெற்றுத்தந்த **"மண்சஞ்சிகை"** பிரதம ஆசிரியர் திரு.வை.சிவராஜா அவர்களுக்கும் இவ் நிதியினை வழங்கிய திரு திருமதி பன்னீர்ச்செல்வன்-செல்வரஞ்சினி தம்பதிகளின் பிள்ளைகளான செல்வன் அவின், செல்வன் அருண் அவர்களுக்கும் நன்றியினை கூறிக்கொள்வதோடு

செல்வன் அவின் 08.08.2025 செல்வன் அருண் 22.08.2025 அன்றைய தினம் பிறந்தநாளைக்கொண்டாடும் இருவருக்கும் இனிய பிறந்ததின நல்வாழ்த்துகளை தெருவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு:-

தங்களால் வழங்கப்பட்ட பணத்தினைப் பெற்றுக்கொண்டமைக்கான எமது அமைப்பின் 4114 ம் இலக்க பணவரவுப் பற்றுச்சிட்டை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**"தங்களின் உதவிக்கும் ஆதரவிற்கும் என்றும் எமது நன்றிகள்"**

தி. சிவஞானம்
..............................

**தலைவர்**

**ஒளிரும் வாழ்வுஅமைப்பு**

**துணுக்காய்**

**"ஒளிமயமான வாழ்வு"**

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai

மு/விநாயகபுரம் அ.த.க பாடசாலை,துணுக்காய்
Mu/Vinayagapuram G.T.M. School

பதிவு இல : 1402011
PRINCIPAL: Mr.R.T.Suthan Vinayagapuram2017@gmail.com TEL.PHONE:0779694271

மண் சஞ்சிகை,
ஜேர்மனி. ஊடாக,

ஒளிரும் வாழ்வு அமைப்பு,
துணுக்காய்.

ஐயா! அம்மணி

## நன்றி தெரிவித்தல் தொடர்பானது

மேற்படி விடயம் தொடர்பாக எமது பாடசாலையின் தேசிய மட்ட தற்காப்புக் கலை போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கான போக்குவரத்து மற்றும் சீருடைக்கான நிதி உதவி கோரிக்கைக் கடிதம் ஒளிரும் வாழ்வு அமைப்பினருக்கு அனுப்பியிருந்தோம். அதற்கமைவாக எமது கோரிக்கையினை ஏற்று துரித கதியில் **40,000.00/= (நாற்பதாயிரம் ரூபா)** பெறுமதியான நிதியினைப் பெற்றுத்தந்த ஒளிரும் வாழ்வு அமைப்பினர் மற்றும் **"மண் சஞ்சிகை"** பிரதம ஆசிரியர் திரு.வை சிவராஜா அவர்களுக்கும், இவ் நிதியினை வழங்கிய பன்னீர்செல்வன் செல்வறஞ்சினி தம்பதியினருக்கும் செல்வன் அவின், அருண் ஆகியோருக்கும் எமது பாடசாலைச் சமூகம் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தோடு செல்வன் பன்னீர்செல்வன் அவின் 08.08.2025, செல்வன் பன்னீர்செல்வன் அருண் 22.08.2025 அன்றைய தினம் பிறந்த நாளை கொண்டாடும் இருவருக்கும் இனிய பிறந்தநாள் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

R. T. Suthan
Principal (SLPS)
Mu/ Vinayagapuram G.T.M.
Thunukkai

..............................

அதிபர்

முபவிநாயகபுரம் அ.த.க.பா

## மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும் கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்று உதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1-3 திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு

உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலினிசா (பி.தி 10.04.2014)
செல்வகுமார் சதுமிகா (பி.தி 12.11.2010)
றொனி டிலக்சனா

(பி.தி 28.10.2015)

........................................................................................................................

4-5 திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- மகேஸ்வரன் அர்ச்சனா(பி.தி 19.05.2009)

........................................................................................................................

6- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சுரேஸ்குமார் மனோறஞ்சனி (30.08.2004)

........................................................................................................................

7- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சிவகுமார் சிரோமி (பி தி 30.08.2014)

........................................................................................................................

8-9 திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
அமுதசுரபி அறக்கட்டளை - வவுனியா
உதவி பெறுவோர்..செல்வி சிற்பவானந்தராசா டேன்சிகா பிதி

10- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா

உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 ) ..

.....................................................................................................................................

11- Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)

.....................................................................................................................................

12- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

.....................................................................................................................................

13 திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம் - தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - சுரேஸ் சுஜந்தினி (பிதி 23.10.2013)

.....................................................................................................................................

14- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நல்லரெட்ணம் துர்க்கா பிதி 25.11.2003

.....................................................................................................................................

15- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நிசாந்தன் லதுமிக்கா பிதி 23.02.2015

.....................................................................................................................................

16- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg - 480-00 யூரோ
ஞானசம்பந்தர் குருகுலம் - மட்டக்களப்பு
உதவி பெறுபவர் சத்தியசீலன் சாயிரிதன் பிதி 07.06.2010

.....................................................................................................................................

17- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim - 2.400-00யூரோ
நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம்(1200-00 +1200-00)
உதவி பெறுபவர் இல்லப் பிள்ளைகள் அனைவரும்

-----------------------------------------------------------------------------------------------------------------.

**பொறுப்பெடுத்தவர்கள் 14 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)**

**உதவி பெறுவோர் 16 பிள்ளைகள்**

**(தாயகம் - சிறீலங்கா)**

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-07-2025 **(மேலதிகச் செலவு)** 200-96

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
03. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
04. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
05. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen +100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு-
06- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
08- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
09- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
10- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim+ 400-00
(நல்லாயன் சிறுவர் இல்லம் கல்வி மேம்பாட்டு மாதாந்த உதவி)-------------

\+ 980-00+ 980-00

---------------

\+ 779-04

**அன்பளிப்புகள்...**

11- திரு பரமானந்தன் பிரபாகரன் - Oberhausen + 110-00
(தாயாரின் நினைவு உதவி)
12- திருமதி இந்து தெய்வேந்திரம் - Soest - + 110-00
(தாயாரின் நினைவுநாள் அன்பளிப்பு)
14- திரு ப பன்னர்ச்செல்வன் - London + 121-41
(மகனின் பிறந்தநாள் அன்பளிப்பு))
13- திரு துவர்மன் சௌந்தரராசா - Duisburg + 100-00
(மகனின் பிறந்த நாள் அன்பளிப்பு)
14- திரு பொன்னையா பகீர்தரன் - Duisburg + 100-00
(மகளின் பிறந்தநாள் அன்பளிப்பு)

----------------

\+ 541-41 + 541-41

-------------

\+1.320-45

முற்பக்கப்படி + 1.320-45

**அனுப்பியது...**

| | ரூபா | யூரோ |
|---|---|---|
| 1)ஒளிரும் இல்லம்"மல்லாவி-துணுக்காய் - (பன்னீர்அன்பளிப்பு-விநாயகபுரம் பாடசாலை) | 40.000-00 - | 121-41 |
| 2) நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம் (27.08.2025 மேரி + மங்கை கல்வி நிதி உதவி) | 1.36.978-58- | 400-00 |
| 3) இலட்சனையசேனை சாலோம் சிறுவர் இல்லம் - கைதடி -சௌ.துவர்மன் | 32.493-40- | 100-00 |
| 4) சாந்தோம் முதியோர் இல்லம் - மன்னார் (23.07.2025 பிரபா தாயார் நினைவு) | 36.066-68 - | 110-00 |
| 6) ஒளிரும் வாழ்வு இல்லம்-புதுக்குடியிருப்பு (23.07.2025 இந்து தாயார் நினைவு அன்பளிப்பு ) | 36.036-95 - | 110-00 |
| 7) அமுதசுரபி அறக்கட்டளை - வவுனியா (பிரிந்தாவனி வருடாந்த அன்பளிப்பு) | 1.63.291-27 - | 480-00 |
| 8) திருஞானசம்பந்தர்குருகுலம -களுதாவளை (ரகுப்பிரியன் வருடாந்த அன்பளிப்பு) | 1.63.262-92 - | 480-00 |

---------------.

- 1.801-41 -1.804-41

-----------------

- 480-96

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

01.07.2025 - 31.07.2025 - 19-09
01.08.2025 - 31.08.2025 -20-49.................................... - 39-58

-----------------------

31.08.2025 மீதி கையிருப்பு **மேலதிகச் செலவு** **- 520-54**

--------------------

**Sisters of Charity**

*"Shanthom"*
Home for the Elders
Pattim, Mannar.
Sri Lanka.

08/07/2025

திருமதி இராஜேஸ்வரி நிமலராசா,
ஜேர்மனி.

அன்புடையீர்,

உங்களது அன்பு அம்மாவான அமரர் திரேசா வல்லிபுரம் அவர்களின் 30வது ஆண்டு நினைவாக மன்னாரில் உள்ள சந்தோம் முதியோர் இல்ல 35 முதியோருக்கு மதிய உணவை மண் சஞ்சிகை ஊடாக (92.60 யூரோ) 30000/= வழங்கியமைக்கு உங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். உங்களையும் குடும்பத்தினரையும் இறைவனை வேண்டுகின்றோம். அம்மாவின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு

Sister Incharge
Santhom Home For Elders
Sisters of Char...
Pattim...

**Good Shepherd Child Development center,**
**Mullai Road, Mankulam,**
**Srilanka.**
E-mail – mankulamcdc@gmail.com
Tel. No. – 0212060077/+94 775924582

15.07.2025

அன்பின் மண் சஞ்சிகை உறுப்பினர்களுக்கு இறையாசீர் கூறி மடல் மூலம் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமக்கு ஒத்துழைப்பு நல்கி வரும் அன்புள்ளங்கள் உங்கள் ஒவ்வொருவரையும் பாராட்டுகின்றோம். வாழ்த்துகின்றோம் பல சிறார்களின் வாழ்வு வளம்பெற நீங்கள் எடுக்கின்ற முயற்சியை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

சிறுவர்களின் நலன் கருதி 27.06.2025 அன்று திருமதி மேரி விஜயகுமார் மற்றும் திருமதி மங்கையற்கரசி சிவராசன் ஆகியோரால் மண் சஞ்சிகை ஊடாக அனுப்பி வைத்த 136868.67 (400 யூரோ) எம் கரம் கிடைத்தது.

பிள்ளைகளை குறையின்றி நிறைவுடன் அரவணைத்து அவர்களின் வாழ்வு வளம்பெறவும் தமது குறிக்கோளை நிறைவேற்ற நீங்கள் செய்து வருகின்ற அர்ப்பணிப்புள்ள சேவை தொடரவும் உங்களின் தொழில்துறைகளில் முன்னேற்றம் காணவும் உடல்உள நலத்துடன் வாழவும் ஆசிப்பதோடு தொடர்ந்தும் உங்களின் உதவிக்கரம் எப்போதும் இப்பிள்ளைகளை தாங்கும் என நம்புகின்றோம்

இம்முறை O/L பரீட்சை எழுதிய எம் மாணவர்களில் இருவர் நல்ல பெறுபேறுகளை பெற்று இருக்கின்றார்கள். இது உண்மையிலேயே நீங்கள் எம் சிறார்களின் கல்விக்கு செய்த உதவியினாலே சாத்தியமாகியது.

உங்களின் அனைத்து ஒத்துழைப்பிற்கும் மீண்டும் நன்றி கூறுவதுடன் எங்கள் செபமும், அன்பும் உங்கள் அனைவருக்கும் என்றும் உள்ளது என்று கூறி விடைபெறுகிறோம்.

இப்படிக்கு,

Sister In Charge
Good Shepherd Children's Home
Mankulam.

**இந்து அன்பகம் சிறுவர் அபிவிருத்தி நிலையம்**

**Hindu Anpakam Children Development Center**

இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்

Parentless Children Pity Rescue, Protect Them

பதிவு. இல: NP/30/23/04/02
NEP/05/V/55/111
Reg.No: HA/04/V/24

E-mail: hinduanupakam@gmail.com

2ம் கட்டை, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா.
2nd Mile post, Mannar Rd, Veppankulam, Vavuniya.

தொ.இல: +94 024-2223683
T.P : +94 024-2223683

President
K.Jeyarany

Vice President
K.Uthayakumar

Secretary
S.Niranjana

Treasurer
S.Basugy

Asst. Secretary
N.Dilshanth

Asst. Treasurer
K.Sasikaran

Board of Members
G.Sriskantharajah
K.Kanesarajiah
S.Raveendran
S.Rathimalar
V.Rajalaxmi
K.Niththiyananthan
S.Jayaruban
S.Vasanthan
T.Lankathevi

Auditor
T.Amalan

Bank/Ac/details
03202025429l
Hatton National Bank
Vavuniya.

Contact:
024 222 3683
077 6143628

E-mail:
hinduanpakam@gmail.com


2025.07.05

நிர்வாகத்தினர்,
மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை,
ஜேர்மனி,

நன்றி கூறுதல்

மேற்படி எமது இல்லச்சிறுமியான சுனில்சாந்த அஸ்வினி என்பவரின் பராமரிப்புச் செலவிற்காக தங்களின் மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை வாசகர்கள் ஊடாக (450 யூரோ) ரூபா 136506.00 ஒருலட்சத்து முப்பத்து ஆறாயிரத்து ஐநூற்று ஆறு ரூபாவினை அனுப்பி வைத்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்களின் சேவை மென்மேலும் சிறக் எல்லாம் வல்ல ஸ்ரீபத்திரகாளி அம்பாளை வேண்டுகின்றோம். அத்துடன் எமது சிறார்களின் உ நலன் கருதி தொடர்ந்தும் இதுபோன்ற உதவிகளை வழங்குவீர்கள் என நம்புகின்றோம்.

தலைவர்
இந்து அன்பகம்
சிறுவர் அபிவிருத்தி நிலையம்
மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா.
பதிவு இல : NP/30/23/04/02

# ஆவணப்படுத்தல் முயற்சியில் (6) ஆறு மில்லியன் பக்கங்களைக் கடந்த ஈழத்து எண்ணிம நூலகம்'

இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்ற நூலக நிறுவனம், 31.055.2025 இன்றுடன் ”6,069,660” பக்கங்களை ஆவணப்படுத்தியிருக்கிறது.

நூலகம் மற்றும் பல்லூடக நூலக வலைத்தளங்களில் ஆவணப் பாதுகாப்பை முன்னெடுத்து வரும் நூலக நிறுவனத்தின் செயற்பாடுகளில், இதுவரை 6 மில்லியன் பக்கங்களை எண்ணிம வடிவில் பதிவுசெய்து பாதுகாத்திருப்பது என்பது ஒரு மிக முக்கியமான விடயமாகும்.

2005 ஆம் ஆண்டிலிருந்து 122 செயற்றிட்டங்கள் வாயிலாக இத்தனை ஆவணங்களையும் ஆவணப்படுத்தியிருப்பதுடன் சிறப்புச் சேகரங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், பிராந்திய சேகரங்கள் என தனது செயற்றிட்டங்களை பல கோணங்களில் நகர்த்திச் சென்று தற்போது 14 தொடரும் செயற்றிட்டங்கள் மூலமாக தனது ஆவணப்படுத்தற் பணியை முன்னெடுத்துச் செல்கிறது.

இந்த அடைவினை எட்டுவதில் நிதி வழங்கல், இடவசதி ஏற்பாடு, உபகரணங்கள் வழங்கல், தொழில்நுட்ப உதவி, ஆலோசனை, ஒருங்கிணைப்பு, மற்றும் சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தல் என எல்லா விதத்திலும் தங்களது ஒத்துழைப்பை வழங்கிய நூலகப் பங்களிப்பாளர்கள், நூலக பணியாளர்கள், மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் நூலக நிறுவனம் தனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றது.
மேலதிக தகவல்களுக்கு : www.noolaham.org

**மேலும் விபரம் 80ம் பக்கத்தில்.....**

**குறிப்பு:-**
நூலக சேவையினரின் அரிய பணி சிறப்பானது... வாழ்த்துகள்!..

யேர்மனிவாழ் எழுத்தாளர்களே!..படைப்பாளிகளே!. உங்களால் எழுதப்பட்ட நூல்களை இந்த நூலக நிறுவனத்துக்கு அனுப்புங்கள். PDF வடிவத்திலும் கணனி மூலம் அனுப்பலாம்..

காலாதி காலம் அங்கே கணனிமயப்படுத்தி வைக்கப்படும். நாம் இல்லாமல் போனாலும் அங்கே வரலாற்றுப் பதிவாக பல நூற்றண்டுகளுக்குப் பத்திரப்படுத்தி வைக்கப்படும் ஆகவே உங்கள் படைப்புகளைத் தாமதியாமல் அனுப்பி வையுங்கள்!... மண் சஞ்சிகையின் வெளியீடுகளை நூலக இணையத்தில் (www.noolaham.org) பார்வையிடலாம்...**ஆசிரியர்......**




மேலதிக விபரங்கள் 79 ம் பக்கத்தில்





Soest - யேர்மனியில் வசிக்கும் எமது வாசகர் திருமதி இந்து தெய்வேந்திரம் அவர்களின் நிதி உதவியால் தாயாரின் நினைவாக மன்னாரிலுள்ள சாந்தோம் முதியோர் இல்லத்தில் வசிப்போருக்கு உணவளித்தல் 05.08.2025








Duisburg - யேர்மனியில் வசிக்கும் எமது வாசகர் திரு திருமதி துவர்மன் - சிவாஹனி தம்பதிகளின் புதல்வன் செல்வன் அஞ்ஜான்தேவ் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவர்களின் நிதி உதவியால் கைதடியிலுள்ள "இரட்னைசேனை" இல்லத்தில் வசிப்போருக்கு உணவளித்தல் 14.08.2025

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 233








யாழ் - செம்மணி புதைகுழி மாபெரும் மனிதப் பேரவலம்
31.08.2025 வரை 187 மனித எலும்புக்கூடுகள் மீட்பு

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |